நவீனகால

# தப்ஸீர்கள்

அறிமுகக் குறிப்பு

அஷ்ஷெய்க் என். கபூர்தீன் (ஸஹ்றவி)

குர்துபா பதிப்பகம்

**நவீனகால தப்ஸீர்கள்**

***அறிமுகக் குறிப்பு***

ஆசிரியர்: அஷ்ஷெய்க் என். கபூர்தீன் (ஸஹ்வி)
முதல் பதிப்பு: பெப்ரவரி 2015
பக்கம்: 88
அட்டை வடிவமைப்பு, தளக்கோளம்: அஸார் வஸீர்
வெளியீடு: குர்துபா பதிப்பகம், 52, படுபிடிய, லீமகஹகொடுவ, கண்டி.

விலை: 200/-

**Naveena Kala Thafseerkal**

Ash sheikh N. Gafoordeen
First Edition: February 2015
88 Pages
Layout & Cover Design by Azar Wazeer
Published by Kurthuba Publication,
52 C, Batupitiya, Leemagahakotuwa, Kandy.

**ISBN: 978-955-7619-00-2**

Price: 200/-

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 07 |
| அறிமுகம் | | 09 |
| 1. | ஸப்வதுத் தபாஸீர் | 14 |
| 2. | அய்ஸருத் தபாஸீர் | 22 |
| 3. | தப்ஸீருல் குர்ஆனில் கரீம் | 25 |
| 4. | அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன் | 29 |
| 5. | தப்ஸீர் அல்மராகி | 40 |
| 6. | தப்ஸீர் இப்னு பாதீஸ் | 45 |
| 7. | இஷாராதுல் இஃஜாஸ் பீ மழானில் குர்ஆன் | 50 |
| 8. | தப்ஸீருல் மனார் | 52 |
| 9. | பீ ழிலாலில் குர்ஆன் | 61 |
| 10. | தப்ஹீமுல் குர்ஆன் | 67 |
| 11. | ஸய்யித் குதுப் - மௌதூதி ஆகியோர்க்கு எதிரான விமர்சனங்கள் | 71 |
| 12. | அல்இஃஜாசுல் பயானி லில் குர்ஆனில் கரீம் | 75 |
| 13. | இஃராபுல் குர்ஆன் வபயானிஹி | 78 |
| 14. | தப்ஸீருத் தஹ்ரீர் வத்தன்ஸீல் | 80 |
| 15. | தாஜுத் தபாஸிர் லில் கலாமில் முல்கில் கபீர் | 83 |
| முடிவுரை | | 85 |

# ஆசியுரை

ஒரு முஸ்லிம் அருள் மறை அல்குர்ஆனை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கும் அதனை நடைமுறை வாழ்வின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்வதற்கும் துணை புரியக் கூடியவைகளாக தப்ஸீர் நூல்கள் திகழ்கின்றன.

மேற்கத்திய, நவீனத்துவ சிந்தனைகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவிப்பதற்கும் இஸ்லாத்தின் தனித்துவங்களையும் விழுமியங்களையும் அல்குர் ஆனின் நிழலில் நோக்குவற்கும் நவீன கால தப்ஸீர்கள் அளப்பரிய பங்கினை ஆற்றின என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையில், இந்நூலானது பிரபலமிக்க நவீன கால தப்ஸீர்கள் பற்றிய உண்மையான வடிவத்தை தெளிவாக அறிந்து கொள்ள முன்வைக்கப்படும் ஓர் காத்திரமான முயற்சியாகும். தப்ஸீர் நூல்கள் பற்றிய அறிமுகம் மாத்திரமன்றி அவற்றின் விளக்க முறைமை களையும் தப்ஸீர் ஆசிரியர்களின் சிந்தனைப் பின்புலத்தையும் தெளிவாக எடுத்துரைப்பது இதன் சிறப்பம்சமாகும். இலங்கை போன்ற அறபு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாத சிறு பான்மை முஸ்லிம்களுக்கு பெரிதும் பயன்படத்தக்கதாக இந்நூல் அமையும் என்பது திண்ணம்.

நூலாசிரியர் என். கபூர்தீன் அவர்களின் அறிவியற்பணி மென் மேலும் தொடர என் வாழ்த்துக்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் எம் அனைவரின் அமல்களையும் பொருந்திக் கொள்வானாக! ஆமீன்.

**கலாநிதி ஏ.எம். முஹம்மது மிஹ்ழார் (நளீமி),**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கலைகளுக்கான மலேஷியப் பல்கலைக்கழகம்

# அணிந்துரை

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

*அல்குர்ஆன் முழு மனித சமூகத்துக்குமான வழிகாட்டி நூல். அது மனிதனின் முழு வாழ்க்கைக்குமான நேரிய வழிகாட்டல்களை வழங்குகிறது. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அந்த அல்குர்ஆனுக்கான விளக்கமாக அமைகின்ற ஒரு கலையே தப்ஸீர் கலையாகும். இல்முத் தப்ஸீர் எனப்படுகின்ற தப்ஸீர் கலையானது இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவமான ஒரு கலையாக மதிக்கப் படுகிறது.*

*இஸ்லாமியக் கலைகளில் தப்ஸீர் கலைக்கு மிக முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. ஸஹாபாக்கள் காலம் முதல் இன்றுவரை அது துரிதமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. ஒவ்வொரு தப்ஸீரும் கால சூழ்நிலை, எழுதியவரின் அறிவுப் பின்னணி, அவர் தேர்ச்சி பெற்ற துறை, சார்ந்துள்ள சிந்தனைப் போக்கு என்பவற்றுக்கு ஏற்ப வித்தி யாசப்படுகின்றது. அந்த வகையில் முஹம்மத் அப்துஹு, ரஷீத் ரிழா, செய்யித் குத்ப், ஆயிஷா அப்துர் ரஹ்மான், மௌலானா மௌதூதி போன்ற பல நவீன கால அறிஞர்களின் தப்ஸீர் துறை பங்களிப்பு களும் அவரவர் வாழ்ந்த சூழல், சமூகப் பின்னணி என்பவற்றிற்கு ஏற்ப வித்தியாசப்படுகின்றன. அவை ஆரம்ப கால தப்ஸீர்களிலிருந் தும் பல வகையிலும் வேறுபட்டுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.*

*அவற்றை எமது சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காக எடுத்த இம்முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இத்துறையில் தமிழ் மொழி யில் வெளிவருகின்ற முதல் நூல் இதுவென நான் நம்புகின்றேன். நவீனகால தப்ஸீர்களை அதற்குறிய துறைகள், பண்புகள், தனிச்*

சிறப்புகளுடன் அழகிய வடிவில் மிகவும் தெளிவாக அறிமுகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த ஒரு சமூகத் தேவை இம் முயற்சியினூடாக நிறைவேறுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நவீன தப்ஸீர்களுடனான தொடர்பும் பரிச்சயமும் எமது சமூகத் தில் ஷரீஆத்துறை ஆலிம்களிடம் மிகவும் குறைவாகவே காணப் படுகின்றது. அவற்றை வாசிப்போரின் எண்ணிக்கையும் விரல் விட்டு எண்ணக்கூடியளவே உள்ளது. பெரும்பாலானோர் ஆரம்ப கால இமாம்களின் விளக்கவுரைகளுடனே தமது வாசிப்பினை மட்டுபடுத்துகின்றனர். நவீன காலத்தில் எழுதப்பட்டுள்ள விளக்க வுரைகள் தொடர்பான அறிவின்றி புதுப்புது பிரச்சினைகளை அணுகுவதும், அவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டங் களை விளக்குவதும் மிகவும் கடினமாகும். அவ்வாறே தப்ஸீர் துறையில் துறைபோகக் கற்க விரும்பும் எவரும் ஆரம்பகால, நவீனகால தப்ஸீர்களை கற்றல் வேண்டும். ஆரம்பகால தப்ஸீர்களை தெளிவான விதத்தில் புரிந்து கொள்வதற்கு நவீனகால தப்ஸீர்கள் பெரிதும் துணைபுரிகின்றன. எனவே, ஒவ்வொரு ஆலிமும் இது குறித்து சிந்தித்து செயற்படுவது அவசியமாகும். அதற்கான தூண்டுதல்களையும் உந்து சக்தியினையும் இந்நூல் வழங்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இந்நூலாசிரியர் சகோதரர் என். கபூர்தீன் அவர்களின் ஆய்வுப் பணி தொடரவும், இவ்வாறான காத்திரமான கல்விப் பங்களிப்பு களை எதிர்காலத்தில் தொடர்ந்து செய்யவும் அல்லாஹ்வின் அருள் கிட்ட பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஜாமிஆ நளீமிய்யா, பேருவளை.

# முன்னுரை

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே.

அல்குர்ஆனை கற்க விரும்பும் எவரும் அதன் கருத்தாடலை சரிவர புரிந்துக்கொள்வது அவசியமாகும். பிழையான கருத்துரை களும் புரிதல்களும் அல்குர்ஆனின் தனித்துவத்தை சரிவர தெரிந்து கொள்வதற்கு தடைக் கற்களாக அமைந்துவிடுகின்றன. அல் குர்ஆனை புரியவைப்பதில் அதன்துறைசார் இஸ்லாமிய அறிஞர் கள், கால தேவைக்கேற்ப நிதானத்துடனும் மார்க்க பின்புலத்துட னும் விளக்கங்களை முன்வைத்துள்ளனர். அவர்களின் பணிக்கு அல்லாஹ்வின் கூலி நிச்சயம் கிட்டும். ஆமீன்.

இலங்கை முஸ்லிம்களிடம் கடந்த ஐந்து தசாப்தகாலமாக அல்குர்ஆனை படிக்க வேண்டும் அதனை விளங்கவேண்டும் என்ற சிந்தனை எழுந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது. ஆனால் அறபு மொழிப் பரிச்சயம் இல்லாமை ஒருவகை சோர்வுநிலைக்கு இட்டுச் செல்கின்றமையையும் உன்னிப்பாக நோட்டமிட முடிகிறது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை இலங்கை வாழ் இஸ் லாமிய அறிஞர்களுக்கு இருக்கும் கடமைகளில் முக்கியமானதாகும்.

இந்நூல் அத்தகைய தேவைக்கு சிறியளவிலான பங்களிப்பினைச் செய்கிறது. தப்ஸீர்க் கலை வளர்ச்சியில் நவீன கால தப்ஸீர்களின் பணிகள் பற்றிய விரிந்த பரப்பிலிருந்து சிறியளவிலான அறி முகத்தை தருகின்றது. நவீனகால தப்ஸீர்களாக அடையாளங்காணப் பட்ட 'அல்மனார்' கால முதல் இன்றுவரை எழுந்துள்ள முக்கிய தப்ஸீர் நூல்கள் பற்றிய அறிமுகத்தை முன்வைக்கின்றது. இதன் மூலம் நவீனகால தப்ஸீர் ஆசிரியர்கள் முஸ்லிம் உம்மாவை

அல்குர்ஆனோடு ஒன்றினைப்பதற்கு பல்வேறு கோணங்களில் முன்வைத் துள்ள வழிகாட்டல்களை புரிந்தக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய கற்கைகள் தொடர்பாக மாணவர் களுக்காக வரையப்பட்டுள்ள பாடத்திட்டத்திட்டங்களுக்கு துணை நூல்கள் இல்லாத குறைபாடு நீண்டகாலமாவே இருந்து வருகிறது. இந்நூல் தப்ஸீர்கள் தொடர்பான பாட அலகுக்கு துணையாக அமையுமென கருதுகின்றேன். மாணவர்கள், இளைஞர் யுவதிகள், பெற்றோர் என சகல தரப்பினரும், நவீனகால தப்ஸீர்த் துறை அறி ஞர்களால் அல்குர்ஆனை விளங்குவதற்கு முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை புரிந்துகொள்ள அறியதொரு வாய்ப்பாக கருது கிறேன். அத்தோடு தப்ஸீர் நூலாசிரியர்களின் பணிகள் பற்றிய நல்ல மனப்பதிவினை எம்மிடையே ஏற்படுத்துமென உறுதிகொள்கி றேன்.

முதுகலை தத்துவமாணி கற்கை நெறிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் சிறு அலகே திருத்தங்களுடன் இங்கு நூலுருப் பெற்றுள்ளது. இத்துறையில் வழிகாட்டிய என் ஆசான்கள் அனைவரினதும் பணியை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக. இதன் மூலம் பயன்பெறுவோரின் நன்மைகளை என் பெற்றோருக் கும் ஆரம்பக் கல்வி முதல் இன்றுவரை கற்றுத் தரும் ஆசிரியர் களுக்கும் கிடைக்க அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

யா அல்லாஹ்! பிரயோகமற்ற அறிவிலிருந்தும் தூய்மையற்ற செயலிலிருந்தும் அச்சமற்ற உளப்பாங்கிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

**என். கபூர்தீன் (ஸஹ்வி)**
அறபு இஸ்லாமிய நாகரிக கற்கை அலகு
கலை பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

# அறிமுகம்

*கி.பி. 1924ம் ஆண்டு முஸ்லிம் உலகம் இஸ்லாமிய கிலாபத்தின் வீழ்ச்சியால் துயர்கொண்ட காலப்பகுதியாகும். கிலாபத் அதன் தோற்றத்திலிருந்து அப்பாஸிய ஆட்சியின் ஆரம்ப காலப்பகுதி வரை வளர்ச்சியை நோக்கிச்சென்று அதே ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியலிருந்து படிப்படியாக வீழ்ச்சி கண்டது.*

*எனினும், அவ்வப்போது தோன்றிய தனிமனிதர்களின் முயற்சி யால் அது இடைநிறுத்தப்பட்டது. இதன்போது ஐரோப்பா முன்னெடுத்த சிலுவை யுத்தங்களையும் கூட முஸ்லிம்களால் வெற்றிகொள்ள முடிந்தது. முஸ்லிம்களுக்குப் பகைவர்களாக விளங்கிய தாத்தாரியர்கள் முஸ்லிம்கள் பற்றி நல்லெண்ணம் கொண்டு அவர்களை ஏற்று வாழவும் வழி வகுத்தது.*[1]

*எனினும், தொடர்ந்தேர்ச்சியான உட்பலவீனங்களினாலும் வெளிச்சூழ்ச்சிகளினாலும் முஸ்லிம் சமூகம் ஆயுதப் படை*

---

1) அல்வஸீதானி, அத்தௌளலா அல் உஸ்மானிய்யா, ப. 27-23.

யெடுப்புக்களின் முன் பலவீனப்பட்டது. பதின் மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்து பதிநான்காம் நூற்றாண் டின் இறுதிவரை மங்கோலியப் படையெடுப்பு உக்கிரமடைந் திருந்தது.

எனினும், பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உஸ்மானி யரின் வருகை பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் சீர்கேடுகளுக்கு எதிரான பாதுகாப்பு அரணாக மாறியது. இதனூடாக உஸ்மானியர்கள் மூன்று கண்டங்களைச் சேர்ந்த இருபத்தாறு நாடுகளை ஏககாலத்தில் ஆட்சிபுரியும் அளவிற்கான பலத்தைப் பெற்றிருந்தனர். ஆனாலும், பதினெட்டாம் நூற்றாண்டினைத் தொடர்ந்து சாம்ராஜ்யத்தின் வளர்ச்சியானது வீழ்ச்சிக்கட்டத்தை நோக்கிச் சென்றது. புற எல்லைகளில் அதன் கட்டுப்பாடு தளர்ந்த தோடு ஐரோப்பியர்கள் மொழி, இன பிரதேச வாதங்களைத் தூண்டி பல சதித்திட்டங்களை மேற்கொண்டனர்.[2]

இதைக்கட்டுப்படுத்த மேலதிக வளங்கள் இஸ்லாமிய உலகுக்குத் தேவைப்பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டு முதல் வரலாற்றில் என்றும் சந்தித்திராத சிந்தனைப் படையெடுப்பும் இராணுவப் படையெடுப்பும் கிலாபத்தை ஆட்டம் காணச்செய்தது. மீள முடியாத படுகுழியில் தள்ளப்பட்டு விட்டதோ என்ற அச்ச நிலைக்கு அது மிக மோசமாக வீழ்ச்சியுற்றது. இன்னும் சில காலம் சென்ற போது மேற்குலகால் ஐரோப்பாவின் நோயாளியென கிலாபத்தின் கேந்திரப் புள்ளியான துருக்கி பெயரிடப்பட்டது.[3]

இறுதியாக, கி.பி.1924ம் ஆண்டு துருக்கியின் தந்தை என வர்ணிக்கப்பட்ட கமால் அத்தா துர்க் என்ற ஆட்சியாளரால் உஸ்மானிய கிலாபத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யூதர்களின் வருகைக்காக கதவுகள் திறக்கப்பட்டன.

---

2) http://ds.dial.pipex.com/masud/ISLAM/nuh/masudq3.htm (04.08.2009)

3) அல்வஸீதானி, அத்தெளலா அல் உஸ்மானிய்யா, ப. 23. (முஸ்லிம்களிடமும் துருக்கி ஐரோப்பாவின் நோயாளி என்ற தவறான சிந்தனைக் காணப்படுகிறது. இது மேற்குலகின் திட்டமிடப்பட்ட பிரச்சாரமாகும்)

கிலாபத்திற்கெதிரான புரட்சியைக் காரணமாக வைத்து அறபு சமூகங்களை பிரித்தானியர்கள் ஏமாற்றினர். இதன் விளைவாக, துருக்கியில் மதச்சார்பற்ற அரசு உருவாக்கப்பட்டது. ''ஸைக்கஸ் பிக்கோ ஒப்பந்தம்'' மூலம் கி.பி.1940 களின் பின்னர் பிரித்தானியாவும், பிரான்ஸும் அறபு நாடுகளைக் கூறு போட்டுக்கொண்டன.(4)

இஸ்லாத்தைப் பேசினால் ''அடிப்படைவாதி'' அல்லது ''பயங்கரவாதி'' எனப் பெயர் சூட்டி முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டனர். எனினும், அல்லாஹ்வின் நாட்டம் வேறு விதமாக இருந்தது. இஸ்லாம் ஒருபோதும் இறந்து விடமாட்டாது. அது ஒருபோதும் இருந்த இடமறியாமல் ஒதுக்கித் தள்ளப்படவுமாட்டாது என்று ஒவ்வொரு முஸ்லிமும் நம்ப வேண்டும் என்ற நிலையை உணர்த்தியது. இக்கருத்தை அல்குர்ஆன் ''அவன்தான் நேர்வழியையும் சத்திய மார்க்கத்தையும் கொடுத்து இவ்வுலகில் அதுவே மிகைத்ததாக இருக்க வேண்டும் என்று தனது தூதரை அனுப்பி வைத்தான்''(5) என மிகத் தெளிவாக விளக்குகின்றது.

இவ்வசனம் இறங்கியமைக்கான பின்னணியை அவதானித்தால் முன்கூறிய கருத்தினை தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். மேலும், முஹம்மது (ஸல்) அவர்கள் ''அல்லாஹ் நூற்றாண்டிற்கொருமுறை அந்த சமூகத்திற்காக அதன் மார்க்கத்தை புனரமைக்கக் கூடியவர்களை அனுப்பி வைக்கிறான்''(6) எனக் கூறினார்கள். அவரது இக்கருத்து இஸ்லாமிய சமூகம் நோயுற்று பலவீனமடைய முடியும். ஆனால், ஒருபோதும் இறந்து போக மாட்டாது. அது தனது வீழ்ச்சிப் பாதையிலிருந்து மீட்சிபெறும் என்பதையே வலியுறுத்துகின்றது.

இஸ்லாமிய சமூகம் தன் பணியை மறந்து சத்தியத்திலிருந்து தூரமாகி அசத்தியத்தின் பால் சாய்கின்ற போதெல்லாம் அல்லாஹ் இத்தகைய புனர்நிர்மாணிகளை அனுப்பி காலத்திற்குக் காலம் நேர்வழி காட்டுகின்றான்.

---

4) முஹம்மது கமால், அத்தௌலதுல் உஸ்மானிய்யா, ப. 141-145.

5) அல்குர்ஆன், 48: 28.

6) இப்னுமாஜா, ஜாமிஉஸ் ஸுனன், ஹதீஸ் 765. பா. 3, ப. 68.

இந்த வகையில் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் (கி.பி.1703-1791), ஜமாலுத்தீன் ஆப்கானி (கி.பி.1838-1897), முஹம்மது அப்துஹு (கி.பி.1849-1905), ரஷீத் றிழா (1865-1935), இமாம் இல்யாஸ் (கி.பி.1885-1942), மௌலானா மஃதூதி (கி.பி.1903-1979), உமர் தில்மிஸானி (கி.பி.1904-1986), இமாம் ஹஸனுல் பன்னா (கி.பி.1906-1949), அப்துல் காதர் அவ்தா (கி.பி.1906-1954), செய்யித் குதுப் (கி.பி.1906-1966), இமாம் அலி தன்தாவி (கி.பி.1909-1999), அப்துல்லாஹ் பின் பாஸ் (கி.பி.1912-1999), மஹ்மூத் அஸ்ஸவ்வாப் (கி.பி.1914-1997), இமாம் அபுல் ஹஸன் அலி நத்வி (கி.பி.1914-1999), ஸய்யித் ஸாபிக் (கி.பி.1915-2000), முஹம்மது அல்கஸ்ஸாலி (கி.பி.1917-1996), யூசுப் அல் கர்ளாவி (பிறப்பு: கி.பி.1926), முனீர் ஷபீக் (பிறப்பு: கி.பி.1934) (ரஹ்) ஆகியோரையும் இன்னும் பலரையும் முஜத்தித்(7) என்ற பெயர் வரிசையில் குறித்துக் கொண்டே செல்ல முடியும்.

இவர்கள் அனைவரும் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்தனர். இவை அல்குர்ஆனை விளக்குவதற்கு முயற்சித்த முபஸ்ஸிர்களின் சிந்தனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவர்கள் மரபு ரீதியான, மற்றும் நவீன தப்ஸீர் முறைகளை கைகொண்டு அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்களை தெளிவாக முன்வைக்கும் வகையில் அல்குர்ஆனை விளக்க முற்பட்டனர். ஐக்கிய உம்மாவை கட்டியெழுப்புவதனை யும் அல்குர்ஆனுடனான தொடர்புகளை இணைப்பதனையும் அவர்கள் கருப்பொருளாக கொண்டிருந்தனர்.

அத்தகைய தப்ஸீர்கள் பற்றிய அறிமுகத்தை இந்நூல் முன்வைக் கின்றது. அவை அல்குர்ஆன் வசனங்கள் முன்வைக்கும் விளக்க முறைமை (Tafsir methodology), தப்ஸீர் ஆசிரியர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் என்பன மிக சுருக்கமாக அறிமுகப்படுத்தும் நோக்கத்தை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.


---

9) அஹ்மத் அமீன், ஸுஅமாஉல் இஸ்லாஹி பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 21-28.

அல்குர்ஆனுக்கான விளக்கவுரை வழங்கும் வழிமுறை நபி (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் இறங்கிய காலம் முதலே ஆரம்ப மாயிற்று. நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் அல்குர்ஆனுக் கான விளக்கவுரைகளை நபித்தோழர்கள் மேற்கொண்டனர். நபித்தோழர்களில் தப்ஸீர் துறை நிபுணர்களாகக் கருதப்பட்ட முக்கியமானவர்களை மையமாகக் கொண்ட தப்ஸீர் குருகுலக் கற்றல் முறைகள் மக்கா, மதீனா, ஈராக் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன.

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தப்ஸீர், ஹதீஸ், தஸவ்வுப் பற்றிய தனியான கற்றலும் தேடலும் ஆரம் பிக்கப்பட்டது. இக்காலம் முதல் தப்ஸீர் தனிக்கலையாக வளர்ச்சி கண்டது. தப்ஸீர் கலையின் ஆரம்ப கட்டம் அல்குர்ஆன், அல் ஹதீஸ் ஆகிய இரண்டையும் மட்டும் கொண்டமைந்திருந்தது. பின்னர் நபித்தோழர்களின் கருத்துக்களைக் கொண்ட தப்ஸீர் விளக்க முறைகள் வளர்ச்சி கண்டன.

அந்த வகையில் இவை தப்ஸீர் மஃசூர், தப்ஸீர் ரஃயி என இருவகையில் இக்காலப் பகுதியில் வளர்ச்சி கண்டன. நவீன கால தப்ஸீர் சிந்தனைப் போக்கு கி.பி. 800 களில் ஆரம்பிக்கும் வரை இந்நிலை காணப்பட்டது. நவீன கால தப்ஸீர்கள் தப்ஸீர் அஸ்ருல் ஹதீஸ் என அடையாளப்படுத்தப்பட்டது. இன்றுவரை வெளிவரும் தப்ஸீர் பெரும்பாலும் தப்ஸீர் அல் அஸ்ருல் ஹதீஸ் என்றே அழைக்கப்படுகிறது.



# ஸப்வதுத் தபாஸீர்

## முஹம்மது அலி அஸ்ஸாபுனி (ரஹ்)

## (கி.பி 1930)

*அஷ்ஷெய்க் அலி அஸ்ஸாபூனி (ரஹ்) அவர்கள் சிரியாவின் ஹல்ப் நகரில் அறிவுப் பின்னணிகொண்ட குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதில் அல்குர்ஆனை மனனமிட்டுக் கொண்டார். அரச பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் வர்த்தகத்துறையில் கற்க ஆரம்பித்து ஒருவருட முடிவில் தமக்கு இத்துறையில் தொடர்ந்து கற்பதில் விருப்பமின்மையால் ஷரீஆத் துறையைத் தெரிவு செய்தார்.*

*வர்த்தகக் கல்வியில் வட்டியுடன் தொடர்பான வங்கி முறைமை களின் சட்ட விதிகளைப் படிப்பதில் அவருக்கு விருப்பமின்மை யானது இத்துறையை விடுவதற்கு காரணமாயிற்று. எனினும், ஷரீஆத் துறையில் இணைந்து கற்றுத் தேர்ந்தார். கி.பி. 1949 ஆம் ஆண்டு சிரியா அரசின் புலமைப் பரிசிலைப் பெற்று எகிப்து*

*அல்அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண் டார். சிரியா மற்றும் எகிப்துக்கு இடையிலான உறவுகளில் முரண்பாடு ஏற்பட்டபோது தொடர்ந்தும் கற்கமுடியாத நிலையில் சிரியாவில் தங்கிவிட்டார். பின்னர் எட்டு வருட காலம் சிரியாவின் நீதித் துறையில் கடமை புரிந்தார்.*[(1)]

*இமாம் அலி அஸ்ஸாபூனி (ரஹ்) அவர்களின் தப்ஸீர்த் துறைப் பணியில் ''ஸப்வதுத் தபாஸீர்'' என்ற நூல் முக்கியமானதும் விமர்சனத்துக்குரியதுமாகும். ஐந்து வருட கால முயற்சியின் விளைவாக கி.பி. 1980 ஆம் ஆண்டில் இதனை அறபுலகிற்கு கொண்டு வந்தார். தப்ஸீர்க் கலை வளர்ச்சியின் மூல தப்ஸீர்களாகக் கருதப்படுகின்ற தப்ஸீர்களில் பதினைந்திற்கும் அதிகமானவற்றை உசாத்துணையாகக் கொண்டுள்ளார். அவற்றின் கருத்துக்களில் இமாம்களான தபரி, ஆலூஸி, இப்னு கஸீர் (ரஹ்) ஆகியோரின் கருத்துக்களை ஆதரித்து தமது முடிவை முன்வைத்துள்ளார். இஸ்ராஈலிய்யத்துக்கள், கருத்து முரண்பாடான விடயங்கள், அறபுமொழிப் பிரயோகக் கருத்து வேறுபாடுகள் என்பவற்றை தவிர்த்துள்ளார்.*[(2)]

*இவர் ''ஸப்வதுத் தபாஸீர்'' என தமது நூலுக்குப் பெயரிட்டதன் நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், பெறுமதிமிக்க பழைய தப்ஸீர் களின் கருத்துக்களை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் முன்வைத்திருப்பதனை சுட்டிக்காட்டவே இப்பெயரை இட்டுள்ள தாகக் குறிப்பிடுகின்றார்.*[(3)]

*அல்குர்ஆன் வசனங்களை விளக்குகையில், முதலில் அத்தியாயத் திற்கான சுருக்கமான முன்னுரையை குறிப்பிட்டு, அவ்வத்தியாயத் தின் மையக்கருத்துக்களை குறிப்பிடுவார். பின்னர், அடுத்தடுத்து*

---

1) அப்துல் காதிர் முஹம்மதுஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறூன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 183.

2) முஹம்மது அலி அஸ்ஸாபுனி, ஸப்வதுத் தபாஸீர், பா. 2, ப. 20.

3) அப்துல் காதிர் முஹம்மதுஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறூன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 184.

வரும் வசனங்களுடனான தொடர்புகளை குறிப்பிட்டு மொழிப் பிரயோகம் பற்றிச் சுருக்கமாக கருத்துரை வளங்கியதன் பின்னர், வசனங்கள் இறங்கியமைக்கான காரணங்களை குறிப்பிட்டு அத்தியாயத்தை விளங்கப்படுத்துவார். இறுதியாக குறிப்பிட்ட அத்தியாயம் மூலம் பெறவேண்டிய மையக்கருத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக கூறிச் செல்வதை அவதானிக்க முடியும்.[(4)]

### அ. ஸப்வதுத் தபாஸீருக்கு எதிரான விமர்சனங்கள்

இத்தப்ஸீரின் முறைமையை அஷ்ஷெய்க் அபுல் ஹஸன் அலி நத்வி, அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் மஹ்மூத், அஷ்ஷெய்க் முஹம்மது அல்கஸ்ஸாலி, கலாநிதி உமர் நஸீப் (முன்னாள் ராபிதாவின் செயலாளர்) ஆகியோர் பாராட்டியுள்ளனர்.[(5)] எனினும், இமாம் அலி அஸ்ஸாபூனி அவர்கள் ஷாபிஈ மத்ஹபுச் சிந்தனையாளராக இருப்பினும் அஷ்-அரிய்யாச் சிந்தனையை ஆதரிப்பவர். இவரது நூலில் தப்ஸீர்களை விட தஃவீல்களே அதிகம் காணப்படுகின்றன. தஃவீலுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் அஷ்அரியினர். எனவே, இமாம் அலி ஸாபூனியின் கருத்துக்களிலும் அஷ்அரியர்களின் செல்வாக்கு காணப்படுகிறது என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விமர்சனத்தை அஷ்ஷேய்க் அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் (1910-1990), அஷ்ஷெய்க் அல்பானி (கி.பி.1904-1999), அஷ்ஷெய்க் ஸாலிஹ் பௌஸான் (பிறப்பு:கி.பி.1935), அஷ்ஷெய்க் பக்ர் அபூஸைத் (ரஹ்), அஷ்ஷெய்க் முஹம்மது ஜமீல் ஸைனூ (ரஹ்) (கி.பி.1925-2010), போன்றோர் முன்வைக்கின்றனர்.[(6)] அஷ்ஷெய்க் ஜமீல் ஸைனூ (ரஹ்) அவர்கள் தமது ‘‘அலா அத்தாகி முஹம்மது அலி அஸ்ஸாபூன் பீ கிதாபி ஸப்வதித் தபாஸீர், வமுக்தத் தப்ஸீர்

---

4) முஹம்மது அலி அஸ்ஸாபூனி, ஸப்வதுத் தபாஸீர், பா. 2, ப. 5-17.

5) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறூன் பில்அஸ்ரில் ஹதீஸ், ப. 183.

6) http://sunnah.org/msaec/articles/arnaut.htm(15.12.2009)

*இப்னு ஜரீர்'' என்ற தலைப்பிலும் ''தன்பீஹாதுன் ஹாம்மதுன் அலா கிதாபி ஸப்வதித் தபாஸீர்'' என்ற தலைப்பிலும் இரு மறுப்புக்களை வெளியிட் டுள்ளார்.*

*''முழாஹலாதுன் அன் கிதாபி ஸப்வதித் தபாஸீர்'' என்ற தலைப்பில் எகிப்து அறபு மொழிப் பீடத்தின் பேராசிரியர் ஸஃத் அல்ழல்லாம் மற்றும் அஷ்ஷேய்க் அப்துல்லாஹ் இப்னு ஜிப்ரைய்ன் ஆகிய இருவரும் வெவ்வேறாக இரு மறுப்புக்களை எழுதியுள்ளனர். மேலும், அஷ்ஷெய்க் ஸாலிஹ் பௌஸான் ''முழாஹலாதுன் ஆம்மதுன் அன் கிதாபி ஸப்வதித் தபாஸீர்'' என்றொரு மறுப்பு ரையை வெளியிட்டுள்ளார்.*

*''மறுப்புக்கள்'' எனும் பெயரில் வெளியிடப்பட்ட நூலில் ''அத்தஹ்ஸீர் மின் முக்ததி ஸிராத் ஸாபூனி லித்தப்ஸீர்'' எனும் தலைப்பில் அஷ்ஷேய்க் பக்ர் அபூ ஸைத் (ரஹ்) மறுப்புக்களை முன்வைத்துள்ளார்.*[7]

*இம்மறுப்புரைகள் யாவும் சவூதி அரேபியாவின் அவ்காப் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இத்தப்ஸீர் நூலை தடைச் செய்யுமாறு, ஹஜ் விவகார அமைச்சுக்கு இலக்கம் 945/2- ஹிஜ்ரி 1408.4.16 என திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. அதில் குறிப்பிட்ட தவறுகள் திருத்தப்பட்டால் மட்டும் மீண்டும் பிரசுரிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.*[8]

*அஷ்ஷேய்க் பக்ர் அபூ ஸைத் தனது விமர்சனத்தில், இவரது தப்ஸீருக்கான பெயர் அழகான ஓர் உண்மையை முன்வைக்கின்றது. அதாவது, இப்னு ஜரீர் (ரஹ்), இப்னு கஸீர் (ரஹ்) ஆகியோரின் ஸலபு சிந்தனையை உள்வாங்கியுள்ளது. அது போலவே ஸமஹ்ஷரி அவர்களின் முஃதஸிலா சிந்தனையையும் ரஷீத் ரிழா அவர்களினது ராபிழா சிந்தனையையும் அர்ராஸி அவர்களின் அஷ்அரி சிந்தனை*

---

7) http://sunnah.org/msaec/articles/arnaut.htm (15.12.2009)

8) http://islamqa.info/ar/ref/39771. (04.08.2009)

யையும் வேறு பல முரண்பாடான சிந்தனைகளையும் கொண்டுள்ளது. இத்தகு முரண்பாடு கொண்ட சிந்தனைகள் பற்றி தெளிவில்லாதவர்கள் இதன் கருத்துக்களை முழுமையாக ஏற்பார்கள். இது முரண்பாடான எல்லா இயக்கங்களினதும் சிந்தனையின் தொகுப்பாகக் காணப்படுகிறது. அந்தவகையில், இதற்கு குறிப்பிட்டுள்ள பெயர் பொருத்தமானது எனக் கூறுகின்றார். மேலும், இமாம் அஸ்ஸாபூனி (ரஹ்) ஹதீஸ்களைச் சரியாக இனங்காணவில்லை. ழஈபை ஸஹீஹாகவும், ஸஹீஹை ழஈபாகவும் ஆதாரமாகக் கொள்கின்றார். இஸ்ராஈலிய்யாத்தை ஆதாரமாகக் கொண்டு ஷரீஆ சட்ட விவகாரங்கள் மதிப்பிடுகின்றார்[9] என்று விமர்சிக்கின்றார்.

அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் (ரஹ்) அவர்கள், இமாம் அஸ்ஸாபூனி அவர்களுக்கு உபதேசிக்கும் போதும் ''நாங்கள் உங்களை அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுமாறு வஸிய்யத் செய்கிறோம். ஸலபு ஸாலிஹீன்களின் மத்ஹபை உங்களது அனைத்து நூல்களிலும் பின்பற்றுமாறு உபதேசிக்கிறோம். அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவை ஆழமாக ஆய்வு செய்யும்போது அல்லாமா இப்னு தைமியா (ரஹ்) அவர்களதும் அவரது மாணவர் இப்னுல் கைய்யூம் (ரஹ்) அவர்களதும் கருத்துக்களிலிருந்து பயன் பெறுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அவர்களது நூல்களான அத்தத்மூரிய்யா, அல்ஹமவிய்யா, அஸ்ஸவாஇக், இஜ்திமாஉல் ஜுயூஷில் இஸ்லாமியா ஆகியவற்றை மீட்டிப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்''[10] என ஆலோசனை வழங்கியுள்ளார்.

அல் முஜ்தமஃ எனும் பிரபல அறபு சஞ்சிகை, இமாம் அலி அஸ்ஸாபூனியிடம் அல்லாஹ்வின் பண்புகள் தொடர்பாக அவர் எழுதிய நூல்களை மையப்படுத்திய பேட்டியை 613 (1403-6-07), 627 (1403-9-7), 628 (1403-9-24), 629 (1403-10-9), 630 (1403-10-16), 631 (1403-10-23), 646 (1404-2-17) ஆகிய இதழ்களில் பிரசுரித்திருந்தது.

---

9) http://sunnah.org/msaec/articles/arnaut.htm. ( 15.12.2009)

10) http://ds.dial.pipex.com/masud/ISLAM/nuh/masudq3.htm (4.08.2009)

இவை தொடர்பான விமர்சனங்களை அஷ்ஷெய்க் ஸாலிஹ் பௌஸான் (ரஹ்) அவர்கள் ''மஜல்லதுத் தஃவா'' எனும் சஞ்சிகையின் (1403-10-29) பதினைந்தாவது இதழிலும், அல்முஜ்தமஃ சஞ்சிகையின் 646, 650 (1404-2-17,30) ஆகிய இதழ்களிலும் வெளியிட்டிருந்தார்.(11) அஷ்ஷெய்க் ஜமீல் ஸைனு அவர்களும் ஸப்வதுத் தபாஸீர் நூலின் பதினைந்து முரண்பாடுகளை சுட்டிக்காட்டி மறுப்புரை வழங்கியிருந்தார்.(12)

இமாம் அலி அஸ்ஸாபூனி (ரஹ்) தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் பின்வருவன முக்கியமானவை.

1. மத்ஹபுகளைப் பின்பற்றுவது அவசியம் என்கின்றமை

2. இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் இஜ்திஹாதுக்குரிய தகைமையைப் பெற்றிருந்தாலும் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் மத்ஹபை பின்பற்றியவர் எனக் குறிப்பிட்டுள்ளமை.

3. அஷ்-அரி மத்ஹபை வழிகெட்டதாக கொள்ளமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளமை.

4. பெண்களைவிட ஆண்கள் பலசாலிகள் என்பதன் பொருள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிருவாக ஒழுங்கை மட்டுமே குறிப்பிடுகிறது என்கின்றமை.

5. உடன்பாடான விடயங்களில் ஒன்றுபடுவோம் முரண்பாடான விடயங்களில் விட்டுக் கொடுப்போம் என்ற சிந்தனையைக் கொண்டுள்ளமை.

6. கொள்கை ரீதியாக பிளவுபடுவது பாவமாகும், பிரச்சினையின் போது தீர்ப்பு அல்குர்ஆன் - சுன்னாவுக்கு மட்டுமே உரியது என்கின்றமை.

---

11) http://ds.dial.pipex.com/masud/ISLAM/nuh/masudq3.htm (4.08.2009)

12) http://sunnah.org/msaec/articles/arnaut.htm. (15.12.2009)

7. அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தினரை ஸலபிகள் - கலபிகள் எனப் பிரித்து நோக்குகின்றமை.

8. அல்லாஹ்வின் உறுப்புக்கள் தொடர்பாக ஈமான் கொள்ளும் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தினருக்கு மாற்ற மான சிந்தனைப் போக்கினைக் கொண்டுள்ளமை.[13]

இமாம் அலி அஸ்ஸாபூனி (ரஹ்) அவர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புரைகள் வெளி வந்துள்ளன. எது எவ்வாறாயினும் நவீன காலத்தில் இத்தப்ஸீர் நூல் நியாயமான பங்களிப்பினை தப்ஸீர்த் துறைக்குச் செய்துள்ளது. இக்குற்றச் சாட்டுகளுக்கான பதில்களை இமாம் அலி அஸ்ஸாபுனி அவர்கள் ''கஷ்புல் இக்திராஆத் பீ ரிஸாலதித் தன்பீஹாத் ஹவ்ல ஸப்வதித் தபாஸீர்''[14] எனும் பெயரில் வெளியிட்டுள்ளார்.

தற்காலத்தில் இலகுவான முறையில் பழமைவாத தப்ஸீர்களின் கருத்துக்களின் சரியான போக்கை விளங்கிக்கொள்வதற்கு உதவு கின்ற தப்ஸீராக இதனைக் கருதமுடியும். தப்ஸீர் ஜலாலைன் என்ற நூல் சொற்பிரயோகங்களை விளங்கிக் கொள்வதற்குத் துணை நிற்பது போலவே இத்தப்ஸீர் நூல் அல்குர்ஆனின் கருத்துக்களை மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரிகிறது.

இலங்கையில் அதிகமான அறபு மத்ரஸாக்களின் பாடத் திட்டத்தில் ஸப்வதுத் தபாஸீர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. அறபு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாத நாட்டு மக்களுக்கு அல்குர்ஆனை விளங்குவதற்கு இந்நூல் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. ஷரீஆவிற்கும், அகீதாவிற்கும் முரணானதாக சவூதி அறேபியாவின் பெரும்பான்மை உலமாக்களும் ஏனைய நாடுகளின் சில உலமாக்களும் மட்டும் கருதுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

13) அலி அஸ்ஸாபூனி, கஷ்புல் இக்திராஆத் பீ ரிஸாலதித் தன்பீஹாத் ஹவ்ல ஸப்வதுத் தபாஸீர், ப 5-8.

14) மேலது, ப. 12-14.

ஆயினும், இந்நூலின் குறிப்பிட்ட சில கருத்துக்களை வைத்து மட்டும் அகீதாவிற்கு முரணானது என்ற தீர்வுக்கு வருவது பொருத்தமற்றதாகும். ஏனெனில், இமாம் அலி அஸ்ஸாபுனி (ரஹ்) அவர்கள் அகீதாவில் முரண்பட்டவர் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக எந்த தகவலுமில்லை. அந்தவகையில், இவரை அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தினரின் அகீதாவுக்கு முரண்பட்டவர் என்று நோக்கப்படாததால் இவரது நூலை, அல்குர்ஆன் வசனங்ளை விளங்கிக் கொள்வதற்கு துணையாகக் கொள்ள முடியும். எனினும், விமர்சனத்துக்குரிய விடயங்களை தவிர்ந்து கொள்வது பொருத்தமானதாகவும் இருக்கும்.



# அய்ஸருத் தபாஸீர்

## அபூபக்கர் ஜாபிர் அல்ஜஸாஇரி (ரஹ்)
## (கி.பி.1921–1990)

*அய்ஸருத்தபாஸீர் என்ற தப்ஸீர் நூலின் ஆசிரியர், அபூபக்கர் ஜாபிர் அல்ஜஸாஇரி அவர்கள் அல்ஜீரியாவில் பிறந்தவர். தமது ஆரம்பக் கல்வியை சொந்தக் கிராமத்தில் தொடர்ந்தார். அல்குர்ஆனை மனனமிட்டுக் கொண்டதுடன் அறபு மொழியில் தேர்ச்சியும், மாலிக் மத்ஹபில் நிபுணத்துவமும் பெற்றிருந்தார். மதீனாவுக்கு வருகை தந்து ஷரீஆத்துறையில் கல்வி கற்றார். பின்னர் தனது கிராமத்தில் அரச பாடசாலையில் ஆசிரியராக கடமைப் புரிந்தார்.*(1)

*பின்னர் தம் குடும்பத்துடன் மதீனாவுக்குக் குடிபெயர்ந்தார். மதீனா பள்ளிவாயிலில் இமாம்களின் மார்க்க விடயங்கள் கற்பிக்கும்*

1) அபூபக்கர் ஜாபிர் அல்ஜஸாஇரி, அய்ஸருத் தபாஸிர், பா. 1, ப. 5-6.

அவையிலிருந்து தனது புதிய கல்விப் பணியைத் தொடர்ந்தார். சிறிது காலத்தின் பின்னர் மஸ்ஜிதுன் நபவியில் கற்பிப்பதற்கான அனுமதிச் சான்றிதழை மக்காவின் நீதித்துறை தலைமைப்பீடம் இவருக்கு வழங்கியது. இங்கு தப்ஸீர், ஹதீஸ் ஆகிய வகுப்புக்களை நடத்திவந்தார். அத்துடன், கல்வி அமைச்சின் கீழ் இயங்கிய பள்ளிக் கூடங்களிலும் மதீனா தாருல் ஹதீஸ் நிறுவனத்திலும் கடமையாற்றி வந்தார்.

கி.பி.1949ம் ஆண்டில் மதீனா சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டபோது அதன் ஆரம்பகால பேராசிரியர்களில் ஒருவராக இருபத்தாறு வருடங்கள் கடமையாற்றினார். அதிகமான நாடுகளுக்கு விஜயம் செய்து தஃவா பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். கி.பி.1992 களில் மஸ்ஜிதுந் நபவியின் சிறந்த உபன்னியாசியாக சேவையாற்றியுள்ளார்.[2]

**தப்ஸீரின் உள்ளடக்கம்**

இமாம் அவர்கள் தமது தப்ஸீர் நூலின் முகவுரையில், இன்று முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் அல்குர்ஆனை நடைமுறை வாழ்வின் வழிகாட்டியாகக் கொள்வதை விட்டுவிட்டு மரணச் சடங்குகளின்போது பாராயனம் செய்யப்படும் நூலாக மாற்றிக் கொண்டுள்ளனர். இந்நிலையை மாற்றி அதன் யதார்த்தத்தை வேக மாக மாறிவரும் உலக ஓட்டத்தில் ஒரு முஸ்லிம் எவ்வாறு புரிந்து கொள்ளலாம் என்பதை விளக்குவதே தமது நூலின் பிரதான நோக்க மாகும். அந்நோக்கை அடைவதற்கு அல்குர்ஆனை இலகுவாக விளங்குவதற்கான வழிவகையைக் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளது. அதனை அடையும் நோக்கில் இத்தப்ஸீர் மிகவும் இலகுவான மொழிநடையில் தொகுக்கப்பட்டுள்ளது. இது ஒவ் வொரு முஸ்லிமின் வீட்டிலும் இருக்க வேண்டியதாகும்[3] என குறிப்பிடுகின்றார்.

---

2) மேலது, பா. 1, ப. 6.

3) மேலது, பா. 1, ப. 6.


இத்தப்ஸீர் நூலில் பின்வரும் விடயங்களை அவதானிக்க முடிகிறது.

1. மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது.
2. ஸலபுகளின் அகீதாவைக் கொண்டுள்ளது.
3. பிக்ஹு சட்ட விடயங்களை விளக்கும்போது நான்கு மத்ஹபுகளுக்குள் நின்று விளக்குகிறது.
4. இஸ்ராஈலிய்யாத்துக்கள் முழுமையாக தவிர்க்கப்பட்டுள்ளன.
5. கருத்து முரண்பாடான விளக்கங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.
6. குறிப்பிட்ட வசனத்துக்கு கருத்து வழங்குவதில் பிரச்சினைகள் எதுவுமிருப்பின் இமாம் தபரி (ரஹ்) அவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.
7. இலக்கண இலக்கிய விதிகள் பற்றிய சர்ச்சைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.
8. கிராஅத் முறைகள் பற்றிய சர்ச்சைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.
9. இமாம்களின் கருத்துக்களால் இத்தப்ஸீர் நிறைந்து, வாசிப்பவர் சிரமப்படாமல் இருக்கும் நோக்கில் தேவையான கருத்துகளுக்கு மட்டும் இடமளிக்கப்பட்டுள்ளன.
10. இத்தப்ஸீர், கருத்துக்களுக்கும் செயல்வடிவத்துக்கும் ஊக்கமளிக்கும் வகையில் காணப்படுகின்றது.(4)

பொதுவாக இத்தப்ஸீர் ஆசிரியர் தப்ஸீர் ஜலாலைய்ன், தப்ஸீர் அத்தபரீ, தப்ஸீர் அல்மராகி ஆகிய நூற்களைத் துணையாகக் கொண்டு விளக்க முற்பட்டுள்ளார். அந்தவகையில் இத்தப்ஸீர் நூலை அல்குர்ஆன் வசனங்களுக்கான சொல் விளக்கங்களை தெரிந்து கொள்வதற்கு துணையாகக் கொள்ளமுடியும். இருப்பினும் இத்தப்ஸீரின் கருத்துக்களுக்களில் நூலாசிரியரின் கருத்துக்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளமையும் சமகாலப் பிரச்சினைகளைப் பற்றி பேசுகின்றமையும் தப்ஸீரின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கொள்ளமுடிகிறது.

---

4) அபூபக்கர் ஜாபிர் அல்ஜஸாஇரி, அய்ஸருத்தபாஸீர், பா. 1, ப. 6.



# தப்ஸீருல் குர்ஆனில் கரீம்

## முஹம்மது முதவல்லா அஷ்ஷஃராவி (ரஹ்)

## கி.பி. (1915.04.11–1998.06.17)

*முஹம்மது முதவல்லா அஷ்ஷஃராவி (ரஹ்) அவர்கள் எகிப்தின் தகானுஸ் கிராமத்தின் இமாம் அலி ஸைனுல் ஆப்தீன் இப்னு ஹுஸைன் இன் பரம்பரையில் சேர்ந்தவர். பதினொரு வயதில் அல்குர்ஆனை மனனமிட்டிருந்தார். கி.பி.1916ம் ஆண்டு அஸ்ஹர் ஸகாஸீக் ஆரம்பப் பள்ளியில் இணைந்தார். கவிதை, உரைநடை, என இலக்கியத் துறையில் ஆர்வம் காட்டினார்.*

*கி.பி.1934ம் ஆண்டு மாணவர் ஒன்றியத்தினதும், ஸகாஸீக் இலக்கிய மன்றத்தினதும் தலைமையைப் பொறுப்பேற்று நடாத்து வதற்குப் பணிக்கப்பட்டார். அவ்வேளையில், கலாநிதி முஹம்மது அப்துல் முன்கிம் கவாஜி, கவிஞர் தாஹிர் அபூ பாஷா, உஸ்தாத் காலித் முஹம்மது காலித், கலாநிதி முஹம்மது ஹைகல், கலாநிதி ஹஸன் ஜாத் போன்றோரின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது.*

இவர்கள் அனைவரும் தாம் தொகுக்கும் இலக்கியத் திரட்டுக்களை வயதில் இளைய ஷஃராவியுடம் சரிபார்த்து வெளியிட்டனர். கி.பி.1937 ஆம் ஆண்டில் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் இணைந்து அறபு மொழித் துறையில் உயர் கல்வியைத் தொடர்ந் தார். அங்கு கல்வி கற்ற காலப் பகுதியில் தேசிய வாத இயக்கத்தி லும் அஸ்ஹர் கல்வி வட்ட இயக்கத்திலும் தமது ஈடுபாட்டைக் காட்டி வந்தார். கி.பி. 1939 ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டம் வெடித்தபோது அஸ்ஹர் மற்றும் எகிப்தின் கல்விக் கூடங்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் முக்கிய பங்கு இவருக்குண்டு.

கி.பி.1940 ஆம் ஆண்டு அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு எகிப்தில் ஸகாஸீக், அலக் ஷாந்தரியா ஆகிய கல்வி நிலையங்களில் ஆசிரியராகக் கடமை புரிந்தார். கி.பி. 1950 ஆம் ஆண்டில் உம்முல் குரா பல்கழைக்கழகத் தின் ஷரீஆத் துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார். எனினும், அவரது சிறப்புத்துறை அறபு மொழியாக காணப்பட்டாலும் பல்கலைக்கழகம், இவரை இறையியல் கற்கை நெறிக்கு நியமித்தது. தன் முழுத் திறமையையும் பயன்படுத்தி இத்துறையில் ஆக்க பூர்வமான பங்களிப்பினை மேற்கொண்டார்.

கி.பி. 1963 ஆம் ஆண்டில் அப்துல் நாஸருக்கும் மலிக் சஊதுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின்போது எகிப்துக்கு வருகை தந்த இமாம் அஷ்ஷஃராவி மீண்டும் சவூதி அரேபியாவுக்குச் செல்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. அதனால் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் முதல்வராக கடமைப்புரிய பணிக்கப்பட்டார். பின்னர், அல்ஜீரியாவில் அல் அஸ்ஹர் ஆய்வு மையத்தின் தலை வராக சுமார் ஏழு வருடம் செயற்பட்டார். கி.பி. 1976ம் ஆண்டு முதல் கி.பி. 1978 ஆம் ஆண்டுவரை எகிப்து விவகார மற்றும் வக்பு அமைச்சில் சேவையாற்றினார்.

கி.பி. 1987 ஆம் ஆண்டில் ‘‘முஜம்மஃ காலிதீன்’’ எனும் அறபு மொழிக்கான நிறுவனத்தின் உறுப்பினராகப் பணிபுரிந்தார். இவருக்கு இலக்கியத் துறைக்கான ‘‘கௌரவ கலாநிதி’’ பட்டத்தை

*ஜாமிஅது மன்சூரா, ஜாமிஅதுல் மனூமிய்யா ஆகிய இரு பல்கலைக் கழகங்களும் வழங்கி கௌரவித்தன.*

***தப்ஸீர்த் துறைப் பங்களிப்பு***

*முஹம்மது முதவல்லா அஷ்ஷஃரோவி (ரஹ்) அவர்கள் கி.பி. 1980ம் ஆண்டுகளின் போது தொலைக்காட்சியில் அல்குர்ஆனுக்கு வழங்கிய விளக்கவுரைகளே அவரது தப்ஸீர் தொகுப்பாகும். அத்தியாயம் ''அல்பாதிஹா'' முதல் ''அல்மும்தஹினா'' இறுதிவரை மட்டுமே இவ்வாறு விளக்கம் அளிப்பதற்கான சந்தர்ப்பத்தை அல்லாஹ் வழங்கியிருந்தான். அத்தியாயம் ''அஸ்ஸப்'' இன் ஆரம்ப வசனங்களுக்கு விளக்கமளிக்கும் வேளையில் மரணமானார். ''ஜுஸ்உ அம்ம'' இற்கான ஒலிநாடா இருப்பதாக இணையத் தளங்கள் குறிப்பிடுகின்றன.*

*இமாம் அஷ்ஷஃரோவி (ரஹ்) அவர்கள் தமது தப்ஸீர் முறைமை* (Methodology) *பற்றிக் குறிப்பிடும்போது, அல்குர்ஆன் வசனங்கள் தொடர்பாக எனது மனதில் உதித்தவைகளை முன்வைத்துள்ளேன். இதனை நீங்கள் தப்ஸீராகக் கருத வேண்டாம். இது ஒரு கலங்கமற்ற அருட்கொடையின் சில வசனங்களுக்கு ஒரு முஃமினின் உள்ளத்தில் எழுகின்ற கருத்துக்களாகும். அல்குர்ஆனுக்கு தப்ஸீர் செய்ய முடியுமானவர்களுள் மிகவும் பொருத்தமான மனிதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டும்தான். ஏனெனில், இது அவருக்கென்றே இறங்கியது. அவர் அதன்படியே செயற்பட்டு அதனையே எத்தி வைத்தவர். அதையே கற்பித்தவர், அவருக்கே அதன் இரகசியங் களையும் அற்புதங்ளையும் முன்வைக்க முடியும். எனினும் முஹம்மது (ஸல்) அவர்கள் மனிதர்களின் தேவைக்கு ஏற்ற அளவு மட்டுமே விளக்கங்கள் வழங்கினார்கள். மனிதர்கள் சுமக்க முடியு மான சுமையை அதனூடாக முன்வைத்தார்கள். அது செயற்படுமாறு குறிப்பிடும் அல்லது செயற்படுவதைத் தடுக்கும் வட்டத்துக்குள் நின்று மட்டுமே விளக்கினார்கள். அதனால் சாதாரண மனிதரான நான், அல்குர்ஆனுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்று கூறுவதை விட உள்ளத்தில் உதிப்பதை நடைமுறையுடன் தொடர்புபடுத்து வதே எனது பணி எனக் குறிப்பிடுகின்றார்.*

இவரது தப்ஸீர் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசினாலும், அவற்றில் சமூக ஒற்றுமை, கீழைத்தேயவாதிகளின் ஐயங்களுக்கான பதில்கள், அன்றாட வாழ்வின் மனிதப்பண்புகள், வசனங்கள் முன் வைக்கும் உவமான முறைகள் எனப் பல விடயங்களை தெளிவாக முன்வைக்கின்றது. அந்தவகையில் இமாம் அஷ்ஷஃராவி (ரஹ்) அவர்கள் பிரச்சினைகள் நிறைந்த சமூகத்தில் வாழ்ந்தவர் என்ற அடிப்படையில் அல்குர்ஆனை உயிரோட்டமிக்க வடிவில் தன் பேச்சுத் திறமையால் முன்வைத்துள்ளார். அக்கருத்துக்களே பிற்பட்ட காலப்பகுதியில் தப்ஸீர் அல் மராகி என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றது.



# அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன்

## அஷ்ஷெய்க் அலி தன்தாவி (ரஹ்)

## கி.பி (1870 – 1939)

*அல்குர்ஆனை விஞ்ஞான ரீதியாக பார்க்க வேண்டும் என்ற சிந்தனை நவீன கால தப்ஸீர்களில் மிக முக்கிய இடத்தைப் பெறு கிறது. விஞ்ஞானத்துக்கும் சமயங்களுக்கும் இடையில் ஏற்பட்ட போரில் சமயங்கள் தோல்விகண்டன என்ற கருத்து அங்கீகரிக்கப் பட்டவேளையில், அல்குர்ஆன் விஞ்ஞான கருத்துக்களுக்கான அத்திபாரமாக அமைகிறது என்ற சிந்தனையை இஸ்லாமிய அறிஞர் கள் முன்வைத்து, ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபாடு காட்டினர்.*

*விஞ்ஞானத்துக்கு நிறைய பங்களிப்புக்களை முஸ்லிம்கள் வழங்கியுள்ளனர். அந்த வகையில் விஞ்ஞான ரீதியில் அல்குர்ஆன் நோக்கப்பட்டு விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவை விஞ் ஞான கண்டுபிடிப்புக்கள் அன்றி விஞ்ஞானத்தின் முடிவுகள் பற்றிய அல்குர்ஆனின் பார்வைகளை விளக்கும் வகையில் அமைந்தன.*

*அஷ்ஷெய்க் அலி தன்தாவி (ரஹ்) அவர்கள் எகிப்தின் தன்தாவி எனும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். கிராமச் சூழலில் அல்குர் ஆனை மனனமிட்டுக் கொண்டார். அல்அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் தமது மேற்படிப்பை மேற்கொண்டபோது அங்கு அறபு மொழி, ஷாபிஈ மத்ஹபின் பிக்ஹ் கலை ஆகியவற்றில் தன்னை வளப்படுத்திக்கொண்டார்.*[1] *எனினும், தந்தையின் சுகயீனம் இவரது கல்வியைத் தொடர்வதில் பாதிப்பை ஏற்படுத்தியது. இடையில் கல்வி யைத் தொடர முடியாமல் விவசாயத்தில் கவனம் செலுத்தினார்.*

*தான் ஒரு விவசாயியாக வேலை செய்வதையிட்டு கவலைப்பட வில்லை. எனினும், தான் அஸ்ஹரில் இருக்கும்போது வானவியல், புவியியல் பற்றி அதிகம் சிந்தித்ததுண்டு. ஆனால், தொடர்ந்து அது பற்றிய ஆய்வியலில் ஈடுபடமுடியாது போயுள்ளதே எனக் கவலைப் பட்ட சந்தர்ப்பங்களே அதிகமாகும். என்றாலும் இவரது திறமையை உன்னிப்பாகக் கவனித்து வந்த தந்தையின் சகோதரர் முஹம்மது ஷில்பி தொடர்ந்து கற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். கி.பி.1889ம் ஆண்டில் தாருல் உலூமில் இணைந்து கி.பி.1894ம் ஆண்டில் கணிதம், பொருளியல், அட்சரகணிதம், வானியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய துறைகளிலும் ஹனபி மத்ஹபின் பிக்ஹ் கலையிலும் தேர்ச்சிபெற்று வெளியேறினார்.*[2]

*கி.பி.1900ம் ஆண்டு முதல் கி.பி.1910ம் ஆண்டுவரை தமன்கீர் ஆரம்பப் பாடசாலையிலும் நாஸிரிய்யா பாடசாலையிலும் ஆசிரிய ராகக் கடமைப் புரிந்தார். கி.பி.1911ம் ஆண்டில் தாருல் உலூம் கல்வி நிறுவனத்தில் தப்ஸீர், ஹதீஸ் துறைகளுக்கான விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இவரது சிந்தனைகளின் புதுமைத்தன்மை தாருல் உலூமில் வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியது. அது இவரை இந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றம் செய்வதற்கான சூழ்ச்சியாக மாற்றம் பெற்றபோது இந்நிறுவனம் இவரை இழப்பதற்கு விரும்பவில்லை.*

1) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)
2) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

*எனினும், கி.பி.1914 ஆம் ஆண்டு எகிப்தில் யுத்தப் பிரகடனம் செய்யப்பட்ட போது, ஆங்கிலேயர் இமாம் அவர்களை அங்கிருந்து வெளியேற்றினர். பின்னர், அலக்ஷான்டரியாவின் அப்பாஸிய கல்லூரியில் கடமைப் புரிந்து வந்தார். கி.பி.1922 ஆம் ஆண்டிலிருந்து முதுமையின் காரணமாக கற்பித்தலில் ஆர்வம் காட்டுவதைக் குறைத்து எழுத்தாக்கங்களைக் கொண்டுவருவதில் தன்னை ஈடு படுத்திக் கொண்டார். தான் கற்றல் கற்பித்தலின் போது முன்வைத்த கருத்துக்களை ஒழுங்குபடுத்தி நூல்களை வெளிக்கொணர்வதில் ஆர்வமாக இருந்தார்.*[3]

*''சமூக எழுச்சியின் பின்னணியில் மட்டுமே உலகில் சமாதானம்'' என்ற கருத்துத் தொனியில் தன் எழுத்துப் பணிகளை மேற்கொண் டார். அது பற்றிய அறிவியல் கருத்துக்களை விளங்கிக்கொள்வதற்கு மேற்கின் நூல்களை வாசிப்பதில் பின்னிற்கவில்லை. தத்துவவியல் கருத்துக்களை விரும்பிப் படித்து சமூக விடிவுக்காக அதனை முன் வைப்பது பற்றியும் சிந்தித்தார். இவரை சாதாரண மார்க்க அறிஞராக மட்டும் அன்றைய எகிப்து மக்கள் கருதவில்லை. மாறாக, ஓர் இஸ்லாமிய தத்துவ வியலாளராகவும் அறிவியற் கலைகளில் நிபுணத்துவம் பெற்றவராகவும் கருதினர்.*

*பேராசிரியர் அப்துல் அஸீஸ் அதிய்யா (ரஹ்) அவர்கள் குறிப் பிடும்போது, ''நாங்கள் எங்கள் ஷேய்க் அவர்களை அறபு மொழி யிலும், பிக்ஹ் கலையிலும் தர்க்கவியலிலும் பாண்டித்தியம் பெற்ற வராகவும் அவரின் ஆலோசனைகளை உலகில் பலர் கேட்டதாகவும் தான் அறிவோம். ஆனால், அவரிடம் இஸ்லாமியக் கல்வியினூடாக சமாதானத் தூதை உலகுக்கு முன்வைப்பது என்ற கவலை இருந் ததை நாம் அறியோம்''*[4] *என்றார்.*

*இவர் கி.பி.1932 ஆம் ஆண்டில் எகிப்துக்கு வந்தபோது இமாம் ஹஸனுல் பன்னா உடனான தொடர்பு ஏற்பட்டது. அலிதந்தாவி அவர்களும் இமாம் ஹஸனுல் பன்னாவின் சிந்தனைகளினால்*

---

3) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

4) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

கவரப்பட்டிருந்தார். முதற்தடவையாக இமாம் பன்னாவை சந்தித்த போது நீங்கள் மக்களை எதன்பால் அழைக்கின்றீர்கள் எனக்கேட்க, ''நான் அல்குர்ஆனின் பால் மக்களை அழைக்கிறேன்'' என பதில் கூறியதும் ''எங்களது மொழிப்பிரயோகத்தில் அல்குர்ஆன் எனும் புனிதச் சொல்லை பயன்படுத்தி அதைக் கொச்சைப்படுத்த வேண்டாம். இஸ்லாமிய நாடுகள் யாவும் இப்பிரயோகத்தைக் கொண்டே பிரிந்து வாழ்கின்றன. அதற்குப் பதிலாக அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் அழைக்கின்றேன் எனக் கூறுங்கள்''(5) என்றார்.

இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் அலி தந்தாவி (ரஹ்) அவர்களுடன் நெருங்கிப் பழகியபோது அல் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் தலைமைப் பதவியை இவரை ஏற்குமாறு வேண்டிக் கொண்டபோது நீங்கள்தான் பொருத்தமானவர் அதற்கான ஆற்றலை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான் என குறிப்பிட்டு நான் உங்களுக்கு பைஅத் செய்கின்றேன் என இமாம் ஹஸனுல் பன்னா அவர்களின் கையில் பைஅத் செய்து கொண்டார். கி.பி.1940 ஆம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி மரணமாகும் வரை இஹ்வான்களுடன் சேர்ந்து செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(6)

### அ. தப்ஸீர் அல் ஜவ்ஹரி

''அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன்'' எனும் தப்ஸீர் நூலானது, அவரது வாழ்வில் பெற்றுக்கொண்ட அனுபவங்களினதும் சிந்தனைகளினதும் ஒட்டு மொத்த இறுதித் தொகுப்பாகும். இது தாருல் உலூமில் ஆசிரியராகக் கடமை புரிந்த சந்தர்ப்பத்தில் முன்வைத்த கருத்துக்களையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் மையமாகக் கொண்டு எழுதிய 'அல்முஅய்யத்', 'அல்லிவா' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகளாகும். அவற்றை ஒழுங்குபடுத்தி தப்ஸீர் அல்ஜவாஹிர் எனும் பெயரில் கி.பி.1925ம் ஆண்டில் இருபத்தைந்து பகுதிகளில் பதின் மூன்று பாகங்களாக எழுதி

5) மேலது.

6) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

முடித்தார். இது கி.பி.1925 ஆம், 1935 ஆம் ஆண்டுகளில் இருமுறை பதிப்பிக்கப்பட்டுள்ளது.[7]

இமாம் அவர்கள் தமது தப்ஸீரின் பிரதான இலக்கு பற்றி குறிப்பிடுகையில், அறிவியல் கருத்துக்களை முஸ்லிம்களுக்கு விளக்குவதும் அத்துறையில் அவர்களை ஈடுபாடு காட்டச் செய்வதுமாகும். மேலும், சமூகத்தை நவீனமயப்படுத்துவதும் மனித இனத்தின் யதார்த்தத்தை விளக்குவதுமாகும்[8] எனக் குறிப்பிடுகின்றார்.

இத்தப்ஸீரைப் பொறுத்த வரை அலி தன்தாவி (ரஹ்) அவர்கள் ஒவ்வொரு அத்தியாயத்தையும் பல உப பிரிவுகளாகப் பிரித்துள்ளார். ஒவ்வொரு பிரிவும் முன்வைக்கும் கருத்துக்களின் ஒருமித்த தன்மையை விளக்குகின்றார். அவை ஒவ்வொன்றிலும் சொற்பிரயோக முறைமைகளைக் குறிப்பிட்டு அவற்றை தெளிவு படுத்துகின்றார். இங்கு அவர் பொதுவான கருத்துக்களைக் குறிப்பிடுவதைத் தவிர்த்து சொற்கள் ஒவ்வொன்றும் முன்வைக்கும் கருத்துக்களை குறிப்பிடுகின்றார்.

வசனங்களுக்கான கருத்துக்களை குறிப்பிடுகையில் அல்குர்ஆன், சுன்னா, நபித்தோழர்களின் கூற்றுக்கள் ஊடாக விளக்குகின்றார். தமது சொந்த கருத்தை முன்வைக்க கதை கூறும் முறை, உரையாடல் முறை ஆகியவற்றை உத்தியாகக் கொள்கின்றார். பாரம்பரிய இஸ்லாமிய முறையுடன் யூனானிய, இந்து, மற்றும் ஐரோப்பிய தத்துவ முறைகளை தழுவியதாகவும் விளக்கமளிக்கின்றார்.[9]

குறிப்பாக, ஐரோப்பி மற்றும் இந்திய மெய்யியல் கருத்துக்களின் தாக்கங்களை இந்நூலில் அவதானிக்க முடிகிறது. அது போலவே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் சூபித்துவக் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், 'இஹ்வானுஸ் ஸபா' இனது ரஸாயில்களில் இருந்தும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

---

7) அலிதன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், முன்னுரை, பா. 1, ப. 2.

8) மேலது, பா. 1, ப. 4-5.

9) அலிதன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், பா. 1, ப. 340.

சோக்ரடிஸ், பிளேட்டோ, போன்றோரின் தத்துவக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.[10]

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் வாழ்ந்த மெய்யிய லாளர்களின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு பௌதீக வியல், உடல், உயிர், ஆன்மா போன்ற சிக்கல் நிறைந்த கருத்துக் களை முன்வைக்கின்றார். இவைகளை விளங்கு வதற்குக் கொடுத் துள்ள முக்கியத்துவம்தானோ 'தப்ஸீர் இல்மி' அல்லது 'தப்ஸீர் ரூஹிய்யி' என எண்ணுவதற்கு வழிவகுக்கிறது.[11]

அலி தன்தாவி (ரஹ்) அவர்கள் தமது தப்ஸீர் விளக்கங்களுக்கு உசாத்துணைகளாக இஸ்லாமிய நூல்கள், ஐரோப்பிய நூல்கள், சஞ்சிகைகள், எகிப்தில் வெளிவந்த பத்திரிகைகளில் அவரால் இதற்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரைகள் என்பன பயன்பட் டுள்ளன. இவரது தப்ஸீர் அறிவியல் கருத்துக்களுக்கே முக்கியத் துவம் கொடுத்துள்ளது. குறிப்பாக மரணித்தவர்களை மீண்டும் உயிர்ப்பித்தல், மலக்குகள், ஜின், மறுமை, போன்ற மறைவான விடயங்களை அறிவியல் கருத்துக்களைக் கொண்டு விளக்க முற்படு வதை சுட்டிக்காட்ட முடியும்.

உதாரணமாக, மலக்குகளைப் பற்றி விளக்கும் போது, அவர்களை மனித மூளையின் செயற்பாட்டிற்கு ஒப்பிட்டு அதனை இனங் காண்பது எவ்வளவு கடினமோ அதுபோலவே மலக்குளின் செயற் பாடுளையும் இனங்காண்பது கடினமாகும். அவர்கள் அல்லாஹ்வின் படைப்புக்களான கோள்கள், சூரியன், சந்திரன், புற்பூண்டுகள், உயிரினங்கள் அனைத்தினது சுழற்சிகளிலும் பணியாற்றுகின்ற வர்கள்[12] எனக் குறிப்பிடுகின்றார்.

அல்குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு சொல்லா யினும் உலகின் பயன்பாட்டுடன் தொடர்புடையது. அவை வரலாற்

---

10) ஹுஸைன் தஹபி, அத்தப்ஸீர் வல்முபஸ்ஸிறுன், பா. 2, ப. 510.

11) மேலது பா. 2, ப. 510.

12) அலிதன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், முன்னுரை, பா. 2, ப. 262.

றுத் தகவல்கள், அறிவியல் கருத்துக்கள் தொடர்பானதாகவும் இருக்க முடியும். ஆனால், அவற்றை அல்குர்ஆன் மிகவும் சுருக்கமாக முன்வைக்கின்றது. அதற்கு விளக்கங்களை கொடுக்க வேண்டி வர்கள் அவ்வக்கால அறிஞர்களாவர்.

உதாரணமாக, அல்குர்ஆனில் ஆதம் (அலை), ஹவ்வா (அலை) ஆகிய இருவரும் எப்படி படைக்கப்பட்டனர் என்பதற்கான ஆதாரம் இல்லை. அதனை அல்குர்ஆன் மனிதர்கள் விளங்குவதற்கும் அறிவு பெறுவதற்கும் என இடத்தை விட்டுச் சென்றுள்ளது. எனவேதான், வேதங்கள் அறிவுபூர்வமான விடயங்களை தெளிவாக முன்வைப் பதைவிட மனிதர்கள் அறிவுபூர்வமாக விளங்குவதற்குத் விட்டுச் சென்றுள்ளன[(13)] என்கிறார்.

மேற்கின் கருத்துக்களில் அவருக்கிருந்த அறிவு பின்புலம் பற்றி குறிப்பிடும்போது, மேற்குலகம் முன்வைக்கும் அனைத்துக் கருத் துக்களும் அல்குர்ஆனில் காணப்படுகிறன. ஐரோப்பியர் அல்குர் ஆனிலிருந்து எல்லா கருத்துக்களையும் பெற்றுக்கொண்டனர் என்று நான் கூறவில்லை. அவர்களின் சிந்தனை முயற்சியால் அவற்றைப் பெற்றுக்கொண்டனர். அவர்களுக்கு காகத்தையும் காகம் அல்லாத வைகளையும் அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர்கள் எங்களைப் போலவே அவற்றின் வித்தியாசத்தையும் அறிந்து கொண்டனர். எனினும், அவர்கள் அதனை ஆய்வு ரீதயாக ஏற்றுக்கொண்டனர். நாங்களோ ஆய்வின்றி ஏற்றிருக்கின்றோம். இதுதான் எங்களது சமூகத்திற்கும் மேற்குலக சமூகத்திற்கும் இடையிலான வித்தியாச மாகும்[(14)] என்கிறார். இக்கருத்துக்கள், ஒரு முஸ்லிம் எப்போதும் எதனையும் ஆய்வுபூர்வமாக ஏற்கும் நிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென கூற வருவதனை புரிந்துக்கொள்ள முடிகிறது.

இமாம் அலி தன்தாவி (ரஹ்) அவர்கள் அல்குர்ஆனை விளங்கு வதற்கு பிரபஞ்சம் பற்றிய அறிவியல் உண்மைகள் தெரிந்திருக்க

---

13) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

14) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

வேண்டும். அதனால் மட்டுமே அல்குர்ஆனின் யதார்த்த பூர்வமான கருத்துக்களை விளங்க முடியும் என்ற கருத்தை ஆதரிப்பவர். அந்தவகையில், ''முஸ்லிம்களுக்கு அனைத்துத் துறைகள் பற்றிய அறிவு இருந்தால் மட்டுமே அல்குர்ஆனின் முழுமைத் தன்மையை புரிந்து கொள்ள முடியும்''[15] என்கிறார்.

இதனடிப்படையில் நோக்குமிடத்து அலி தன்தாவி (ரஹ்) அவர்கள் அல்குர்ஆனை விளங்குவதற்கு அல்குர்ஆனின் வசனங்களினது இயல்புத் தன்மையை விளங்குவதை விட அறிவியல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை மையமாகக் கொண்டு தமது தப்ஸீர் பணியினை முன்னெடுத்திருப்பது புலப்படுகிறது.

இஸ்லாமிய அறிஞர்களில் பலர் இவரது கருத்துக்களுடன் முரண்படுகின்றனர். அலி தந்தாவி அவர்கள் அல் குர்ஆனை அதன் உண்மையான வடிவில் நோக்காது அதனை விஞ்ஞானம், வானியல், கணிதவியல் கோணத்தில் நோக்குவதை முற்றிலும் தவறு என்கின்றனர். சவூதி அரசு இத்தப்ஸீரை பதிப்பித்திருந்தாலும் அவர் தம் நாட்டிற்குள் நுழைவதைக் கூட தடைச்செய்திருந்தது. இதனைக் குறிப்பிடும் கடிதம் ஒன்றினை மன்னர் மலிக் பின் அப்துல் அஸீஸ் தனக்கு அனுப்பிய விடயத்தை தனது நூலின் 25 ஆம் பாகத்தில் குறிப்பிடுகின்றார்.[16]

இத்தப்ஸீர் நூலுக்கு விமர்சனங்கள் காணப்பட்டாலும் இதற்கான தடைகள் காணப்பட்டாலும் அறிவியல் கண்ணோட்டத்தில் அல் குர்ஆன் நோக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு அலி தன்தாவி வித்திட்டவர் என்பதை மறுக்க முடியாது. நவீனகால சவால்களுக்கு அல்குர்ஆனை விஞ்ஞான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்பதனை உலகலாவிய முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அது முறையாக மேற்கொள்ள வேண்டும். அல்குர்ஆனின் தனித்தவம் மங்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த

15) http//ar.org.Tafsirjawhary (15.12.2009)

16) அலிதன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், பா. 25, ப. 77-80.

வகையில், சமகாலத்தில் அல்குர்ஆனை விஞ்ஞான கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு அடிப்படையான நூலாக தப்ஸீர் அல் ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன் அமைந்துள்ளதானது இதற்கேயுரிய தனித்துவத்தை சுட்டிக்காட்டுகிறது.

### ஆ. தப்ஸீர் உள்ளடக்கம்

இமாம் அலி தந்தாவி அவர்களின் ''அல் ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன்'' என்ற நூலில் உள்ளடக்கத்தை நோக்குகின்றபோது பின் வரும் கருத்துக்களுக்கு வரமுடிகிறது.

1. விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறையினையே அதிகமாக காணமுடிகிறது. இதற்கு பின்வரும் அல்குர்ஆன் வசனத்திற்கு அவர்கள் முன்வைக்கும் விளக்கத்தை உதாரணமாகக் கொள்ள முடியும். ''மூஸாவே ஒரே ஆகாரத்தை புசித்துக் கொண்டிருக்க எங்களால் முடியாது. பூமியில் முளைக்கக்கூடிய கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, ஈருள்ளிகளை எங்களுக்காக வெளிப்படுத்தித் தரும்படி உம்முடைய இறைவனை எங்களுக்காக நீர் கேளும்'' என அவரிடம் கேட்டீர்கள். அதற்கு ''மேலானதற்குப் பதிலாகத் தாழ்ந்ததை மாற்றிக் கொள்கின்றீர்களா?....[17] இவ்வசனம் முன்வைக்கும் தாவரங்களை நவீன கால மருத்துவங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். பின்னர் ஐரோப்பிய மருத்துவங்களின் பலா பலன்களை சுட்டிக்காட்டி இது பற்றியல்லாத வேறு ஏதாவது மருத்துவம் பற்றி இவ்வசனம் பேசுகிறதா?[18] என வினாத் தொடுக்கின்றார்.

2. ஹுரூபுல் முகத்தஆத் பற்றி விளக்கும்போது இரசாயன வியலின் மூலகங்களை குறிப்பதற்குக் குறியீடுகள் பயன்படுத்தப் படுகிறது. ஆனால், ஒருபோதும் அதற்கான கருத்துக்கள் கேட்கப் படுவதில்லை மாறாக அதன் பயன்பாடு மட்டுமே புழக்கத்தில் இருக்கும். இதுபோலவே எல்லா மொழிகளுக்கும் அதற்கென

---

17) அல்குர்ஆன், 2: 61.

18) அலி தன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், பா. 1, ப. 180.

தனியான சில குறியீடுகள் காணப்படும் அதற்கு விளக்கம் கூறப் படுவதில்லை. மாறாக அது பயன்பாட்டில் இருக்கும் அதுபோலவே அல்குர்ஆனில் ஹுரூபுல் முகத்தஆத்தையும் கொள்ளவேண்டும்[19] எனக் கருதுகின்றார்.

3. நிச்சயமாக வானங்களும் பூமியும் ஆரம்பத்தில் ஒன்றாக இணைந்தவையாக மூடி இருந்தன. பிறகு அவ்விரண்டையும் நாம் பிரித்தோம். தண்ணீரின் மூலம் உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் உண்டாக்கினோம் என்பதை நிராகரிப்பாளர்கள் பார்க்கவில்லையா? அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்களா? இவ்வசனம் மூலம் வானத்தை அல்லாஹ் பூமியிலிருந்து பிரித்ததை ஒரு அற்புதமாகவே நாம் கருதினோம். ஏனெனில், வானவியல் தொடர்பான ஆய்வு முயற்சிகளின் வெளிப்பாடு ஆரம்பகாலப் பகுதியில் இருக்க வில்லை. ஆனால், தற்போது விஞ்ஞான ஆய்வின் மூலம் மனிதன் அதனை நிறுவுகின்றான். எனினும், தப்ஸீர் ஆசிரியார்கள் ஒரு போதும் அத்தகு விளக்கங்களை கூறவில்லை. மாறாக காபிர்களுக்கு இது பற்றிய அறிவில்லை. அதனால் இதனை நிராகரிக்கின்றனர் என்று முன்னர் கூறினர். ஆனால், விஞ்ஞானத்தின் உண்மைத் தன்மையை இன்று புரிந்துள்ளனர். எனவே, விஞ்ஞானமின்றி அல்குர்ஆனை விளங்குவது கடினம் என ஏற்றுக்கொள்கின்றனர்[20] எனக் குறிப்பிடுகின்றார்.

## இ. விஞ்ஞானத் தப்ஸீர்களை எதிர்க்கும் சமகால உலமாக்கள்

விஞ்ஞானக் கருத்துக்களாக மட்டும் அல்குர்ஆனைப் பார்ப்பதை மரபு ரீதியான அறிஞர்கள் மறுத்தது போலவே சமகால அறிஞர் களும் மறுக்கின்றனர். குறிப்பாக மஹ்மூத் ஷல்துத் (கி.பி.1893-1963) இதனை மறுக்கின்றார். கி.பி.1941 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளி

19) அலி தன்தாவி, அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், பா. 1, ப. 180.

20) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறுன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 30

வந்த மஜல்லதுல் ரிஸாலா எனும் ஆய்வுச் சஞ்சிகையின் 407, 408 இதழ்களில் இது பற்றிய கருத்துக்களை விளக்கியுள்ளார்.[21] அவற்றில் விஞ்ஞான மற்றும் ஏனைய அறிவியல் கலைகள் போன்று அல்குர் ஆனை பார்ப்பதை முற்றாக மறுக்கின்றார். உஸ்தாத் அமீன் அல் கூலி அவர்கள் தமது ''அத்தப்ஸீர் மஆலிமு ஹயாதிஹி வமன் ஹஜுஹுல் யெவ்ம்'' எனும் நூலின் மூலமாக அல்குர்ஆனை விஞ்ஞான ரீதியாக மட்டும் பார்ப்பதை முழுமையாக எதிர்க் கின்றார்.[22]

அல்லாமா முஸ்தபா அல்மராகி (கி.பி.1881-1945) அவர்கள் விஞ்ஞான நோக்கில் அல்குர்ஆனைப் பார்ப்பதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால், இமாம் அலி தந்தாவி அவர்கள் மக்களுக்கு மிகவும் தேவையான விஞ்ஞானக் கருத்துக்களை பொதுவான அடிப்படையில் முன்வைக்கிறார். இதனூடாக பல்வேறு அறிவியல் பகுதிக்கான கதவினை திறந்துள்ளாரே தவிர அவரது நூலில் விஞ்ஞானத்தின் முடிவுகள் முன்வைக்கப்படவில்லை[23] எனக் குறிப்பிடுவதை ''அல் இஸ்லாம் வத்திப்புல் ஹதீஸ்'' எனும் நூலில் அப்துல் அஸீஸ் குறிப்பிடுகின்றார்.

எனவே, உலமாக்களிடம் இரு துருவங்களுக்குமான வாதங்கள் காணப்படுவதனை இதிலிருந்து அவதானிக்க முடிகிறது. அல்குர்ஆன் எல்லா துறைகளுக்கும் வழிகாட்டுகிறது என்றவகையில் சமகால விஞ்ஞான உண்மைகளை அல்குர்ஆனின் நிழலில் நோக்குவது காலத்தின் தேவையாகும். இமாம் அவர்களின் காலத்தில் ஐரோப்பிய விஞ்ஞான கருத்துக்கள் செல்வாக்கு பெற்றிருந்தமை அவரை விஞ் ஞான ரீதியாக அல்குர்ஆனைப் பார்ப்பதற்கு தூண்டியது. எனினும், இத்தப்ஸீர் முழுமையான விஞ்ஞான நூலாகக் கொள்ள முடியாது. மாறாக, விஞ்ஞானத்தை நோக்கி பயனிப்பதற்கு அல்குர்ஆனை பயன்படுத்துவதை தூண்டிய தப்ஸீர் நூலாகவே கருத வேண்டும்.

---

21) மஜல்லதுல் ரிஸாலா, ஆய்வுச் சஞ்சிகை, மலர், 407, 408.

22) அமீன் அல்கூலி, அத்தப்ஸீர் மஆலிமு ஹயாதிஹி மன்ஹஜுஹுல் யெவ்ம், ப. 24-28.

23) அப்துல் அஸீஸ், அல் இஸ்லாம் வத்திப்புல் ஹதீஸ் ப. 3.



# தப்ஸீர் அல்மராகி

## அஹ்மது முஸ்தபா அல் மராகி (ரஹ்)

## (கி.பி. 1881–1945)

முஹம்மது முஸ்தபா அல் மராகி அவர்கள் எகிப்தை பிறப்பிட மாகக் கொண்டவர். இமாம் முஹம்மது அப்துஹூ அவர்களின் சிந்தனையின் பின்னணியில் தன்னை வளர்த்துக் கொண்டவர். நவீனத்துவச் சிந்தனையும் தக்லீதுக்கு எதிரான போக்கும் தூய்மை யான இஸ்லாமிய நெறியும் இவரது குறிக்கோள்களாகும். சமூக விழுமியங்களை கட்டியெழுப்புவதில் இஸ்லாத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இவரது கருத்துக்களுக்கு மன்னர்கள், அமைச்சர் கள், அறிஞர்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் செவிசாய்த்தனர். அவர்களை சந்திக்கின்ற போதெல்லாம் இஸ்லாமிய மயமாக்கலின் அவசியம் சமூகத்தின் எல்லாக் கட்டங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதனை சுட்டிக் காட்டினார். அதற்கான வேலைத்

திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு மேற்கின் ஆதிக்கம் மீண்டும் ஜாஹிலிய்யத்தின் பால் மக்களைக் கொண்டு செல்வதை இடை நிறுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தார்.[1]

நவீன தஃவா முறைக்கு தமது பேச்சாற்றலையும் சிந்தனையை யும் முற்படுத்தியிருந்தார். அல்குர்ஆன் உலகின் யாப்பாக இருக்க வேண்டும். அதில்தான் வாழ்வின் சுபீட்சம், வெற்றி என்பன தங்கியுள்ளன அதன் வழியின்றி புதிய வாழ்வைத் தேடுவதால் தோல்வியையே மனிதன் சந்திப்பான் என்ற கருத்தை ஆணித்தரமாக முன்வைத்தார்.

தனது வாழ்வின் இலட்சியம் தஃவா என்பதை முற்று முழுதாக நம்பியிருந்தார். இது தொடர்பான விளக்கங்களை முன்வைப்பதற்கு வகுப்புக்களை ஆரம்பித்தார். அதில் அல்குர்ஆனின் எதிர்பார்ப்புக் கள் பற்றி மக்களுடன் கலந்துரையாடினார். நடைமுறை வாழ்வில் அல்குர்ஆனின் தாக்கம் பற்றிய கருத்துக்களின் கருப்பொருளாக அவ் வகுப்புக்கள் மாறின. அவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பாகவே இவரது தப்ஸீர் நூல் காணப்படுகிறது.[2]

இமாம் அவர்களின் தப்ஸீர் நூலை அவதானிக்கும்போது அல்குர்ஆனின் சமூகவியல் சார் கருத்துக்கொண்ட வசனங்களைத் தெரிவு செய்து அதில் அல்லாஹ்வின் ஆற்றல், அது சுமந்து வரும் கருத்துக்கள், மனித வாழ்வுக்கு கற்றுத் தரும் பாடம், சமகால உலகில் அதன் பிரயோக முறையில் காணப்படும் அசமத்தனமானபோக்கு எனப் பல்வேறு விடயங்களை விளக்குகின்றார்.

கருத்துக்களை முன்வைப்பதற்கு ஒரே கருத்துடைய பல்வேறு அல்குர்ஆன் வசனங்களை ஒன்று திரட்டி ஒரு தலைப்பின் கீழ் முன்வைப்பது சிறப்புக்குரிய விடயமாகும். அதன்போது முஹம்மது (ஸல்) அவர்கள் முன்வைத்த கருத்துக்கள், நபித் தோழர்களின்

---

1) அஹ்மது முஸ்தபா அல்மராகி, தப்ஸீருல் மராகி, பா. 1, ப. 1-3.

2) அஹ்மது முஸ்தபா அல்மராகி, அத்துரூஸு அத்தீனிய்யா, முன்னுரை, ப. 7-8.

கருத்துக்கள் என தொடராகக் குறிப்பிட்டு அவ்வசனங்களில் அறபு மொழியின் பயன்பாட்டுக் கருத்துக்களையும் தப்ஸீர் துறை அறிஞர்கள் முன்வைத்துள்ள கருத்துக்களையும் தொடர்புபடுத்தி விளக்குகிறார். இத்துடன் மட்டும் தன் கருத்தை சுருக்காது உணர்வு பூர்வமான சமகால கருத்துக்களையும் முன்வைத்து அதன் யதார்த்தம் பற்றிப் பேசுகின்றார்.

இமாம் அல்மராகி தனது கருத்தை முன்வைத்து அதுதான் சரி என்ற மனோநிலையைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் ஏனைய தப்ஸீர் ஆசிரியர்களின் கருத்துக்களில் மட்டும் முழுமையாக தங்கி நிற்கவுமில்லை. தேவையான போது நாகரிகமான முறையில் கருத்துக்களை முன்வைத்து முரண்பாடற்ற பண்பாடுடைய சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் செயற்பட்டுள்ளார். இமாம் அப்துஹு போலவே அத்தகு சந்தர்ப்பங்களில் வீணான விவாதங்களை தவிர்த்து வந்துள்ளார்.

உதாரணமாக ''விசுவாசிகளே உங்களுக்கு முன்னுள்ளோருக்கு போலவே உங்களுக்கும் நோன்பு கடமையாக் கப்பட்டுள்ளது'' என்ற வசனத்தை விளக்குகையில், முன்னையவர்கள் எவ்வளவு காலம் எப்படி நோன்பு நோற்றனர் என்ற வாதமோ அல்லது அது பற்றிய ஆய்வோ எமக்கு அவசியமற்றது. முன்னையவர்களுக்கு நோன்பு நோற்பது பர்ழாக இருந்துள்ளதை நாம் விசுவாசம் கொள்வோம். அந்நோன்பு எப்படியானது என்ற தெளிவில்லாத விவாதங்ளை விட்டுவிடுவோம்(3) என துல்லியமாக விளக்கங்களை முன்வைத்துள்ளார்.

### அ. சமூகப் பிரச்சினைகளைக் கையாளுதல்

இமாம் அல்மராகி அவர்கள் சமூகப் பிரச்சினைகளுக்கும், இஸ்லாமிய உலகத்தின் வீழ்ச்சிக்குமான காரணங்களைக் குறிப்பிட்டு அதற்கான தீர்வுகளை அல்குர் ஆனின் உயிரோட்டத்தில்

---

3) அஹ்மது முஸ்தபா அல்மராகி, அத்துரூஸு அத்தீனிய்யா, பா. 3, ப. 590-591.

முன்வைக்கின்றார். இவர் அறபு, முஸ்லிம் தேசங்களுக்கு ஏற்பட்டுள்ள நோயினையும் அதற்கான நிவாரணியையும் உண்ணிப்பாக அவதானித்து வந்தார். இவரது வகுப்புக்களில் அவற்றிற்கான மாற்றீடுகளை முன்வைத்தார். அநேகமான சந்தர்ப்பங்களில் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் தலைவர்களின் பொறுப்புக்களை யும் முன்வைத்து அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அமானிதத்தை உணரவைக்கும் வகையிலும் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இமாம் அவர்கள் அல்குர்ஆனின் கருத்துக்களை சமகால அறிவியல் கருத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதை மறுக்கவில்லை. மாறாக அல்குர்ஆனின் கருத்துக்களைத் தவிர்த்து அறிவியல் கருத்துக்களைக் கொண்டு மாத்திரம் விளக்குவதை வெறுக்கின்றார். இதனை அவர் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக ஈமான், அகீதா, பிக்ஹ் விடயங்களைப் பேசுகின்றபோது தத்துவவியல், மெஞ்ஞான பார்வையில் நோக்குவதை மறுக்கின்றார். இதனடிப்படையில், இமாம் அல்மராகி அவர் வாழ்ந்த காலத்தின் சமூகப் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து, அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு அதன் வழியில் தீர்வுகளை முன்வைத்தவராக கருதப்படுகிறார்.

உதாரணமாக மனிதன் இயற்றிய சட்டம், ஒழுங்குகள் என்பன பூரணத் தன்மையற்றது. அவன் நீதி நேர்மையாக வாழ்வதற்கு வழிகாட்டல், ஒழுங்குகள் என்பன அல்குர்ஆனில் மட்டுமேயுள்ளது. இதனை விளக்குவதற்கு அத்தியாயம் 'அல்ஹதீத்' இன் இருபத்தைந்தாவது வசனத்தைக் குறிப்பிட்டு, இங்கு 'கிதாப்', 'மீஸான்' எனும் பதப் பிரயோகங்கள் சமூகவியல் பார்வையில் அல்குர்ஆன் முன்வைக்கின்றது. எனவே, மனிதன் அதனை வாசித்து அமுல்படுத்துவது மட்டுமே அவனது பொறுப்பாகும். புதிய ஒழுங்குகள் அவனால் உருவாக்கப்படுவதானது சமூக சீர்கேட்டுக்கு வழிவகுக்கும்[4] என்றார்.

---

4) முஸ்தபா அல் மராகி, தப்ஸீருல் மராகி, பா. 3, ப. 80-85

இமாம் அல்மராகியைப் பொறுத்தவரை சுதந்திரமாக தன் கருத்துக்களை முன்வைத்தவர். இவரது கருத்துக்களை இருபதாம் நூற்றாண்டு முதற்கால் பகுதியின்போது இஸ்லாமிய உலகம் வேண்டி நின்றது. அப்துஹுவின் சிந்தனையின் ஒரு வளர்ச்சிக் கட்டமாக இவரது தப்ஸீரின் கருத்துக்களை அடையாளபடுத்த முடிகிறது.

உஸ்தாத் அல்மராகி ஆற்றிய உரைகளின் சில தகவல்கள் பின்வரும் அட்டவணையில் நெறிப்படுத்தபட்டுள்ளது.

| | இடம் | காலம் | அல்குர்ஆன் வசனம் |
|---|---|---|---|
| 1 | மஸ்ஜித் அல்பூஸரி அலக்ஸாந்தரியா | ஹிஜ்ரி 1256 ரமழான் | அத்தியாயம் அல்பகரா-177 |
| 2 | மஸ்ஜித் அல்ஹுஸைலை எகிப்து | ஹிஜ்ரி 1356 ரமழான் | ஆலஇம்ரான் 123-128 |
| 3 | மஸ்ஜித் சுல்தான் அபுல்அலா, எகிப்து | ஹிஜ்ரி 1356 ரமழான் | அஷ்ஷுரா-13-14 |
| 4 | மஸ்ஜித் சுல்தான் அல்ஹாபி, எகிப்து | ஹிஜ்ரி 1356 ரமழான் | அல்அன்ஆம் 151-153 |
| 5 | மஸ்ஜித் ஸய்யிதா ஸைனப், எகிப்து | ஹிஜ்ரி 1356 ரமழான் | அல்பகரா 185-186 |
| 6 | மஸ்ஜித் அல்பூஸரி அலக்ஸாந்திரியா | ஹிஜ்ரி 1356 ரமழான் | அல்அன்பால் 24-29 |
| 7 | ஜம்இய்யது ஷுப்பானுல் முஸ்லிமீன்- எகிப்து | ஹிஜ்ரி 1360 | அல்புர்கான் 1-10 |
| 8 | ஜம்இய்யது ஷுப்பானுல் முஸ்லிமீன்- எகிப்து | ஹிஜ்ரி 1360 | அல்அஸ்ர்[5] |

5) ஹுஸைன் தஹபி, அத்தப்ஸீர் வல்முபஸ்ஸிறுன், பா. 2, ப. 590.



# தப்ஸீர் இப்னு பாதீஸ்

## இமாம் அப்துல்ஹமீத் இப்னு பாதீஸ் (ரஹ்)

## (கி.பி.1889–1940)

*இமாம் அப்துல் ஹமீத் இப்னு பாதீஸ் அவர்கள் கி.பி.1931 ஆம் ஆண்டு அல்ஜீரியாவில் உருவான ''ஜம்இய்யது உலமாஇல் முஸ்லிமீன்'' என்ற சங்கத்தின் முதன்மைத் தலைவராக கடமையைப் பொறுப்பேற்றது முதல் மரணிக்கும் வரை அதே பதவியிலிருந்து சமூக மேம்பாட்டிற்காக உழைத்தவர்.*(1) *பாத்திமிய்யக்கால பல்கலைக் கழகமான ஸைதூனியாவில் கல்வியை முடித்துக் கொண்டது முதல் தம் பணியை ஆரம்பித்தார். சிறந்த எழுத்தாளரும் நவீன இஸ்லாமிய சிந்தனைப் போக்குடை யோராகவும் விளங்கும் இவர் இளமைக் காலத்தில் ''மஜல்லதுஷ் ஷிஹாப்'' எனும் சஞ்சிகையை வெளியிட்டு வந்தார்.*

---

1) அஸ்ஸர்கலி, அல் அஃலாம், பா. 3, ப. 289.

அதில் அறிவியல், மார்க்க விவகார கருத்துக்கள், இலக்கியப் படைப்புகள் எனப் பதினைந்து இதழ்கள் அவரால் வெளியிட முடிந்தது. இச்சஞ்சிகை அல்ஜீரியாவில் புதிய இஸ்லாமிய சிந்தனைப் புரட்சிக்கு தூண்டுதலை அளித்தது. எனினும், இப்பத்திரிகை அல்ஜீரியாவில் வெளிவருவதை பிரான்ஸ் முற்றாகத் தடுத்தது. அதன் வெளியீட்டாளர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.(2)

இமாம் இப்னு பாதீஸ் தினமும் பத்துக்கும் மேற்பட்ட விரிவுரைகளைப் பல இடங்களில் முன்வைத்து வருவதை வழக்கமாக்கிக் கொண்டவர். அதிக நேரத்தை ஜம்இய்யாவின் கீழ் இயங்குகின்ற மத்ரஸாக்களை பார்வையிடுவதையும் தேவையான ஆலோசனைகளை வழங்கி சீர்த்திருத்தங்களை மேற்கொள்வதையும் இவருக்குரிய கடமையாக மாற்றிக்கொண்டார்.

அல்ஜீரிய்யாவைப் பொறுத்தவரை பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் பின் அறபுமொழிப் பிரயோகத்திற்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் வெகுவாக குறைந்திருந்ததனால் மேல்நாட்டுக் கலாசாரப் பண்பாடுகளுக்கு மோகப்பட்டிருந்தனர். தமது மத்ரஸா மேற்பார்வை விஜயத்தின்போது கல்லூரிச் சிறுமியொருவர் (ஸவ்மா) இமாம் அவர்களை வரவேற்கும் வேளையில் அல்குர்ஆனின் மொழியால் உங்களை வரவேற்கின்றேன். அது எங்கள் மூதாதையரின் மொழி ஏன் எங்கள் நாட்டினதும் மொழிதான்! எனக் குறிப்பிட்டபோது இமாம் கடுமையாகக் கவலைப்பட்டார்.

அவர் தமது உரையில் இப்பிரதேசத்திற்குள் நுழைந்தபோது ஒருவரையும் அறபு மொழியை கௌரவிப்பவர்களாக நான் காணவில்லை. இங்கு இம்மொழி வழக்கொழிந்த மொழியாகவே காணப்படுகிறது. இதனையிட்டு கடுமையாக கவலைப்படுகிறேன். மீண்டும் அல்ஜீரியாவில் அறபு மொழியை எமது தாய் மொழியாக கொண்டுவருவதற்கு முயற்சிப்போம்(3) என குறிப்பிட்டிருந்தார்.

---

2) அஸ்ஸர்கலி, அல் அஃலாம், பா. 3, ப. 289.

3) இமாத் மஹ்மூத் அப்தில் கரீம், அல் இமாம் அஷ்ஷஹீத் ஹஸனுல் பன்னா வ மன்ஹஜுஹு பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், ப. 72-73.

இப்பின்னணி அல்ஜீரிய முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டைத் தெளிவாக படம்பிடித்துக் காட்டுகிறது.

இக்கட்டத்தில் தான் இமாம் பாதீஸ் அல்குர்ஆனை வாழ்வின் நடைமுறைச் சாத்தியப்பாட்டிற்காக கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டார். அதன் விளைவே அவரது தப்ஸீராகும். இமாம் இப்னு பாதிஸ் அவர்களின் நண்பர் அல்லாமா முஹம்மது பஷீர் இப்ராஹீம் இவர் பற்றிக் குறிப்பிடும்போது, ''அல்குர்ஆனை விளங்குவதில் அவருக்கென தனியான இன்பமுண்டு அதனை வாசிப்பதிலும் வார்த்தைகளுக்கு முன்வைக்கும் அழகான விளக்கங்களும் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அதன் வழிகாட்டலை தெளிவுபடுத்தும் விதமும் வார்த்தைகளால் கூறிமுடிக்க முடியாதவை''[(4)] என்கிறார்.

இவர் அல்குர்ஆனை சமூகவியல் கண்ணோட்டத்திலேயே பார்த்தார். உடல், அறிவு, ஆன்மா ஆகியன செயலூக்கம் பெறுவது இதன் ஆழமான கருத்துக்களில்தான் என்பதை பல்வேறு கட்டங் களில் விளக்கியுள்ளார். அவரது தப்ஸீர் கருத்துக்களை நூலுருவில் கொண்டு வருவதற்கு அவருக்கு அவகாசம் இருக்கவில்லை. அவ்வப்போது சஞ்சிகைகள், பத்திரிகைகள் அகியவற்றில் எழுதிவந்தார். பாடங்களை நடாத்துவதிலும் விரிவுரைகள் செய்வதி லுமே முழுமையாக ஈடுபாடுகொண்டிருந்தார்.

சுமார் இருபத்தைந்து வருடங்கள் இப்பணியில் முன்வைத்த உயிரோட்டமான அல்குர்ஆனியக் கருத்துக்கள் சமூகத்தை பயிற்று விப்பதற்கு துணையாயிற்று. அது புதிய பரம்பரையினருக்கு இஸ் லாத்தின் முதுசததைக் காப்பதற்கும், சமூக நோய்களுக்கான சிகிச்சை முறையை தேடுவதற்கும் வழிகாட்டியது. பிரான்ஸின் உளவுத் துறையின் வலைக்குள் சிக்குண்ட இமாம் பாதிஸ் மீலாத் நபி தின விழாவிற்குச் சென்று கொண்டிருந்த போது குத்திக் கொலைச் செய்யப்பட்டார்.[(5)]

---

4) இமாத் மஹ்மூத் அப்தில் கரீம், அல் இமாம் அஷ்ஷஹீத் ஹஸனுல் பன்னா வ மன்ஹஜுஹு பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், ப. 72-73.

5) மாலிக் பின் நபீ, இப்னு பாதீஷ் ஆஸாருஹு : ஜம்உன் வ திராஸதுன், ப. 41-49.

### அ. தப்ஸீர்ப் பங்களிப்பு

இப்னு பாதீஸ் (ரஹ்) அவர்கள், தப்ஸீர் ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிடும்போது நான் முபஸ்ஸிறூன்களின் தப்ஸீர் ஒழுங்கு முறைகளை ஆழமாக நோட்டமிட்டேன். அவர்களது தஃவீலுக்காக தர்க்கித்துக் கொள்வதையும் அவதானித்தேன். அல்லாஹ்வின் வேதத்திற்கு மத்ஹபு ரீதியாக விளக்கமளிப்பதையும் அவதானித் தேன். எந்த முரண்பாடு மில்லாத அல்குர்ஆனில் இவர்கள் கருத்து முரண்படுவதையிட்டு உள்ளம் நோவுகிறது என்றார்.

இமாம் இப்னு பாதிஸ் அவர்களின் தப்ஸீர் விளக்கங்களுக்கு சிறந்த உதாரணமாக, ''நிச்சயமாக எனது சமூகத்தினர் அல்குர்ஆனை புறக்கனித்து ஒதுக்கி விட்டார்கள்'' என்று தூதுவர் கூறுவார்[6] என்ற வசனத்தை விபரிக்கையில்,''நாங்கள் முஸ்லிம்கள் எங்களில் அநேகர் நீண்டகாலமாக அல்குர்ஆனை ஒதுக்கி வைத்து வந்துள்ளோம். எனினும், நாங்கள் அதனை விசுவாசிக்கின்றோம். அல்குர்ஆன் ஈமானுடன் தொடர்பான கோட்பாடுகளை முன்வைத்தபோது அதனை புறந்தள்ளியதுடன் அறிவியல் ரீதியாக அகீதாவை விளக்க முற்பட்டோம். அதனால் தத்துவவியலாளர்களின் கருத்துக்கள் எங்களில் ஆதிக்கம் செலுத்தின. எனவே பகுத்தறிவை முற்படுத்தி னோம். அது போலவே அல்குர்ஆன் ஹலால்-ஹராம், தனிமனித சமூக ஒழுக்கங்கள் பற்றியெல்லாம் விளக்கியது எனினும், அதனை புறந்தள்ளினோம். பிக்ஹ் சட்ட விடயங்களை மட்டும் வாசித்துத் தெரிந்து கொண்டால் போதும் என்றும் அல்குர்ஆன் வசனங்களின் கருத்தை விளங்குவது அவசியமில்லை என்றும் சுருங்கிக் கொண் டோம். எனவேதான், இவ் வசனம் எமது குறைப்பாட்டையே சுட்டிக் காட்டுகிறது. இவ்வகையான சிந்தனையின் அடிப்டையில் நடை முறை வாழ்வில் அல்குர்ஆன் தாக்கம் செலுத்தாதவரை முஸ்லிம் உம்மத்தின் விடிவில்லை''[7] என்ற சிந்தனையில் அல்ஜீரியாவில் இஸ்லாமியப் புரட்சியை ஏற்படுத்தினார்.

---

6) அல்குர்ஆன், 20: 25.

7) இமாத் மஹ்மூத் அப்தில் கரீம், அல் இமாம் அஷ்ஷஹீத் ஹஸனுல் பன்னா வ மன்ஹஜுஹு பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், ப. 76.

இமாம் பாதீஸ் அவர்கள் தன்னை தப்ஸீர் ஆசிரியராக அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, அல்ஜீரியா மக்களிடையே அல்குர்ஆனை வாழ்வில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவே தனது கருத்தை முன்வைத்துள்ளார். இதனடிப்படையில் இக்கருத்துக்களை தப்ஸீருக்கான தனித்துவமாக நோக்க முடியுமா என்ற வினா எழுகிறது. உண்மையில், இவரது கருத்துக்களை சமகால இஸ்லாமிய இயக்கங்களின் தஃவா போக்குகளை முன்வைத்த அறிஞர்களின் பணியினை ஒத்ததாகவே கொள்ளவேண்யுள்ளது. இயக்க உறுப்பினர்களுக்கு வழிகாட்டும் வகையில் தமது பணியினை இதனூடாக முன்வைத்துள்ளார்.



# இஷாராதுல் இஃஜாஸ் பீ மழானில் குர்ஆன்

## பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி (ரஹ்)

## (கி.பி.1877–1960)

*இஸ்லாமிய இயக்கச் சிந்தனையின் அடிப்படையில் அல்குர் ஆனை நோக்கியவர்களுள் இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸியும் ஒருவராவார். துருக்கியில் கைஸாநூன் எனும் பிரதேசத்தில் நூருஸ் எனும் கிராமத்தில் பிறந்தவர். இவரது தந்தை சூபிசச் சிந்தனை கொண்டவராக காணப்பட்டதனால் இவரையும் அதே பின்னணி யில் பயிற்றுவித்திருந்தார்.*(1)

*இஸ்லாமியக் கல்வியை மாபெரும் அறிஞர்களிடம் பெற்றுக் கொண்டார். கல்வித் துறையில் காட்டிய ஆர்வத்தின் காரணமாக*

---

1) முஹ்ஸின் அப்தில் ஹமீத், அந்நூர்ஸி முதகல்லிமுல் அஸ்ரில் ஹதீஸ்', ப. 3.

பதிநான்காம் வயதில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார். இரசாய னவியல், பௌதீகவியல், புவியியல் என அனைத்துத் துறைகளிலும் இவருக்கு அறிவிருந்தது. உஸ்மானியருக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் போர் மூண்டபோது நாட்டுக்கு உதவும் வகையில் மாணவர் குழுக்களை போராட்டத்தை நோக்கி அழைப்பு விடுத் திருந்தார். துருக்கியின் 'ஹரகதுன் நூரியா'[2] என்ற இஸ்லாமிய இயக்கத்தின் ஸ்தாபகராக செயற்பட்டமை குறிப்பித்தக்கது.


ஸஈத் நூர்சியின் தப்ஸீர்த்துறைப் பங்களிப்பு இரு வெவ்வேறு பட்ட பகுதிகளாக காணப்படுகின்றன. முதற் பகுதி ''ஸஈதுல் கதீம்'' எனப்படும். அதாவது அல்குர் ஆனுக்கான விளக்கங்கள் எழுத ஆரம்பித்து ''இஷாராதுல் இஃஜாஸ் பீ மழானில் குர்ஆன்''[3] எனும் பெயரில் எழுவது பாகங்களாக எழுதத் திட்டமிட்டு பின்னர் அத்தியாயம் அல்பாதிஹா மற்றும் அல்பகராவின் முப்பத்து மூன்று வசனங்களுடன் நிறுத்திக் கொண்ட பகுதியாகும். இதில் சாதாரண மாக ஏனைய தப்ஸீர்களில் காணப்படுவது போன்ற கருத்துக்களை யும் விளக்கங்களையும் எழுதியுள்ளார்.

இரண்டாம் பகுதி ''ஸஈதுல் ஜதீத்'' எனப்படும். இது துருக்கியில் அத்தாதுர்கின் சடவாதச் சிந்தனைகளிலிருந்து துருக்கி முஸ்லிம் களை பாதுகாக்கும் வகையிலும் இஸ்லாத்தின் தனித்துவத்தை முன்னிறுத்தும் நோக்கிலும் அல்குர்ஆனை விளக்கும் முறையாகும். இக்கருத்துக்கள் அடங்கிய வெளியீடு ''ரஸாஇலுன்னூர்''[4] என அழைக்கப்படுகிறது.

ஸஈத் நூர்ஸி அவர்களின் சூபித்துவச் சிந்தனையும் புரட்சிகரமான தஃவா முன்னெடுப்புக்களும் அல்குர்ஆனை துருக்கிய மொழியில் விளக்கவதற்கு வழிவகுத்தது. எனினும், இவர் தன்னை தப்ஸீர் விளக்கவுரையாளராக அறிமுகப்படுத்தவில்லை. அந்தவகையில் இவரது தப்ஸீர் கருத்துக்கள் நவீனகால இஸ்லாமிய மயமாக்களுக் கான வழிகாட்டலாக கொள்ள முடியும்.

---

2) முஹ்ஸின் அப்தில் ஹமீத், அந்நூர்ஸி முதகல்லிமுல் அஸ்ரில் ஹதீஸ்', ப. 4.
3) மேலது, ப. 5.
4) பதீஉஸ்ஸமான் சைட் நூர்ஸி, பிலீவ் என்ட் வேர்சிப், ப. 1-2.





முஹம்மது அப்துஹு (ரஹ்)
(கி.பி. 1849 – 1905)

ரஷீத் றிழா (ரஹ்)
(கி.பி.1865–1935)

# தப்ஸீருல் மனார்

*தப்ஸீர் அல்மனாரின் கருத்துக்கள் அல்லது சிந்தனைகள் முஹம்மது அப்துஹு (ரஹ்) அவர்களினதாக காணப்பட்டாலும் அதனை நூலுருவில் கி.பி.1927ம் ஆண்டு ரஷீத் றிழா (ரஹ்) அவர்கள் கொண்டு வந்தார்.*[1]

*இமாம் முஹம்மது அப்துஹு (ரஹ்) நவீனத்துவம் பற்றிய சிந்தனையை ஜமாலுத்தீன் ஆப்கானி இடமிருந்து பெற்று அதற்கு உயிரோட்டம் கொடுத்தவர். முஹம்மத் அப்துஹூவின் சிந்தனைப் பாங்கும் அதன் தோற்றப்பாடாக தப்ஸீர் அல்மனாரும் இஸ்லாமிய உலகின் புதிய போக்கிற்கு வித்திட்டது.*[2]

1) உஸ்மான் அமீன், முஹம்மது அப்துஹு, பா. 1, ப. 27.

2) முஹம்மத் அப்துஹூ தப்ஸீருல் மனார், பா. 1, ப. 58-59.

எகிப்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் பிரான்ஸ், ஜேர்மன் என்பன உலகைப் பங்கு வைத்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் உலகின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற செய்தியை உலகிற்கு இவர் பகிரங்கப்படுத்தினார். முஹம்மது அப்துஹு அப்போது புதுமையை எதிர்பார்த்திருந்தார். கண்மூடித்தனமாக பின்பற்றுவதை முற்றாக எதிர்த்து வந்தார். எதனையும் விமர்சன நோக்கில் பார்ப்பதுதான் பொருத்தம் என்பதை அவ்வப்போது மக்களுக்கு முன்வைத்து வந்தார்.[3]

புதிய வடிவில் இஸ்லாத்தை நோக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்த போது, பழமை பேணும் உலமாக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். மார்க்க விவகாரங்களிலிருந்து உலக விவகாரங்களை தனிமைப்படுத்தி நோக்காமையால் விமர்சனங்கள் நாள் தோறும் கூடிச்சென்றன.

அல்குர்ஆனை நவீனத்துவத்திற்கு அடிப்படை மூலாதாரமாக முன்வைத்தார். அல்குர்ஆனை பிக்ஹ், இலக்கண முறை என்ற நோக்கில் மட்டும் பார்ப்பதைத் தவிர்த்து வாழ்வில் நடைமுறை மாதிரியாக மாற்றுவதற்காக தப்ஸீர் ஆசிரியர் களுக்கு ஆலோசனைகளை முன்வைத்தார். அல்குர்ஆன் நடைமுறை வாழ்வில் அங்கமாக வராதவரை அதன் உண்மைத் தன்மையை மனிதன் விளங்க மாட்டான். எனவே, அதனை வாழ்வில் கடைப்பிடிப்போம். அதன்படி வாழ வழிகாட்டுவோம்[4] என்ற கோஷங்களை முன்வைத்தார்.

சட்ட விவகாரங்கள், இலக்கண விதிமுறைகள் என்பவற்றை முன்னைய தப்ஸீர்கள் நிறையவே பேசுகின்றன. ஆனால், நடைமுறை வாழ்வு தொடர்பான விவகாரங்களை பேசுவதற்கு எந்தவொரு வழிகாட்டலும் இல்லாத போதே இமாம் முஹம்மது

---

3) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறுன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 306.

4) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறுன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 306.

*அப்துஹூ தம் கருத்தை முன்வைத்தார். அவர் பழைய தப்ஸீர்கள் அனைத்தையும் விளங்கியிருந்தார். அவற்றில் பின்வரும் விடயங் களை குறையாகக் குறிப்பிட முயன்றுள்ளார்.*

*1. அவைகள் அதிகமாக இலக்கண விதிகளைப் பேசின. எனினும் அல்லாஹ்வின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நடப்பதைப் பற்றி அழுத்தமாகக் கூறவில்லை. அவை அறபு இலக்கணங்களுக் கான பயிற்சிகளையே வழங்கின அன்றி வாழ்வின் யதார்த்தத்தைப் பேசவில்லை.*

*2. சட்டப் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வு, பண்பாடுகள் பற்றிய பல விடயங்களை பேசினவன்றி அவற்றை நடைமுறை வாழ்வுடன் தொடர்புபடுத்துவதைப் பேசவில்லை.*[5]

*எனவே, முஹம்மது அப்துஹூ இவ்விரு போக்கினையும் விளங்கி அதற்கான வாழ்வியல் உயிரோட்டத்தை வழங்கினார்.*

### *அ. இஸ்லாமிய அகீதா பற்றிய அல்-மனாரின் பார்வை*

*இஸ்லாத்தின் அடிப்படை அல்குர்ஆன் என்பதில் எவ்வித முரண் பாடான கருத்தினையும் கொண்டிருக்கவில்லை. இஸ்லாமிய அகீதா என்பது அல்குர் ஆனிலிருந்து முன்வைக்கப்பட்டதாகும். ஆனால், சிலர் இவ்விடயத்தில் அறிவை பயன்படுத்தியதால் வழி தவறிச் சென்றனர். எனவே, அகீதாவைப் பொறுத்தவரை அல்குர்ஆன் குறிப்பிடுவது எதுவோ அதுவே தமது வழிமுறை*[6] *என்பதை குறிப்பிடுகின்றார்.*

*முஹம்மது அப்துஹூ (ரஹ்) அவர்களின் தப்ஸீர் பற்றிய கருத்துக் களை ரஷீத் றிழா (ரஹ்) குறிப்பிடும்போது ''உஸ்தாத் அவர்கள் முன்னைய தப்ஸீர் ஆசிரியர்களின் கருத்துக்களை மீண்டும் குறிப் பிடுவதற்கு விரும்பவில்லை. சட்டப் பிரச்சினைகள் பற்றி குறிப்பிடப்பட வேண்டிய கட்டத்தில் மாத்திரம் மிகவும் சுருக்கமாக*

---

5) முஹம்மத் அப்துஹூ, தப்ஸீருல் மனார், பா. 1, ப. 54, 87, 88.

6) மேலது, பா. 1, ப. 87-88.

தமது மொழிநடையில் முன்வைப்பார். அடுத்தவர்களின் கருத்துக்களில் தோய்ந்துவிடாது தம் கருத்தை சுதந்திரமாக குறிப்பிடும் போக்குடையவராக இருந்தார். முன்னையோரின் கருத்துக்களை பின்பற்றுவதில் கவனமாக இருந்தார். அவர் அல்குர்ஆனுக்கான விளக்கங்களை முன்வைக்கும் போது தப்ஸீர் ஜலாலைன் என்ற தப்ஸீர் நூலை ஒரு முறை பார்த்து சொற்களுக்கான கருத்துக்களை விளங்கிக் கொண்டு பின்னர் தமது கருத்தை முன்வைப்பார்''(7) என்றார்.

முஹம்மது அப்துஹு அவர்கள் முன்னையோர்களின் தப்ஸீர்களில் தங்கியிருக்கவில்லை. மாறாக மக்களை அல்குர்ஆன் பற்றி சிந்திப்பதற்குத் தூண்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அல்லது கேட்கின்ற, ஓதுகின்ற வசனங்களை உணர்வுபூர்வமாக வாசித்து விளங்குவதற்கு தூண்டிக் கொண்டேயிருந்தார் என்பதை அவரது பின்வரும் வார்த்தைப் பிரயோகம் குறித்துக் காட்டுகின்றது. ''மறுமையில் எம்மிடம் மனிதர்களின் கருத்துக்கள் பற்றியோ அல்லது அல்குர்ஆனை விளங்கிய விதம் பற்றியோ அல்லாஹ் கேட்கப் போவதில்லை. மாறாக, அல்குர்ஆனையும் சுன்னாவையும் எமது வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்ட விதம் பற்றியே கேட்கப்படுவோம். மேலும், உங்களுக்கு கொண்டுவரப்பட்ட தூதை எத்திவைத்தீர்கள் அது பற்றி சிந்தித்தீர்களா அதில் குறிப்பிடப்பட்டுள்ள நலவு கெடுதிகள் பற்றி அறிந்திருந்தீர்களா என்றே கேட்கப்படுவோம்.''(8)

தப்ஸீர் அல்மனாரைப் பொறுத்தவரை இஸ்ராஈலிய்யாத்துக்கள் இடம்பெறவில்லை. அது தொடர்பான ஓர் துணுக்கேனும் நுழைந்து விடாதிருப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக அத்தியாயம் 'அல்புரூஜ்' இல் பாதுகாவலர்களின் செயற்பாடு பற்றி குறிப்பிட்டுள்ளது.

---

7) முஹம்மத் அப்துஹு, தப்ஸீருல் மனார், பா. 1, ப. 54.

8) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறுன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 313.

இங்கு நாம் அவர்கள் பற்றியோ, அவர்கள் எழுது வதற்கு பயன் படுத்தப்படும் எழுதுகோள், தாள், அதன் தன்மை போன்றவைகள் பற்றி சிந்திப்பதற்கு அவசியமில்லை. அதனை ஈமான் கொண்டு வாழ்வில் எந்தவொரு அம்சமும் அல்லாஹ்வினால் மேற்பார்வை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை விளங்கி செயற்படு வதுதான் எமது கடமை[9] என்றார்.

மேலும், அத்தியாயம் ''அல்புரூஜ்'' இல் ''உஹ்தூத்கள்'' பற்றி குறிப்பிடும்போது, இவர்கள் முஃமீன்களா? எங்கு இருந்தனர் என்ற கேள்விகளும் அதற்கான பதில்களும் அவசியமில்லை. அவர்கள் பற்றிய தகவல்களைத் தேடி வீண் சந்தேகங்களை ஏற்படுத்துவதும் அவசியமற்றது[10] எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு இஸ்ராஈ லிய்யத் தொடர்பான விடயங்களை முழுமையாக தவிர்த்து வந் துள்ளமை அல்மனாரின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

### ஆ. சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதில் அல்-மனாரின் பங்கு

முஹம்மத் அப்துஹு அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்திலும் முழுமையான பிரயோசனத்தைப் பெறவேண்டும் என்பதில் விளிப்பாக இருந்துள்ளார். குறிப்பாக அது மனித இனத்திற்கு வழிகாட்டி என்ற வகையில் சமூகப் பிரச்சினைகளை அல்குர்ஆன் அணுகும் முறைகளை விளக்குகிறது என்ற யதார்த்தத்தை முன் வைப்பதில் கவனம் செலுத்தினார். அந்த வகையில் அத்தியாயம் ''அல் அஸ்ர்'' இற்கு சமூக விவகாரங்களுடன் தொடர்புபடுத்தி நீண்ட விளக்கங்களை எழுதியுள்ளார். அவ்வத்தியாயத்தை அறிமுகப் படுத்தும்போது மூன்றே வசனங்களைக் கொண்ட இந்தச் சின்னஞ் சிறு அத்தியாயத்தில் மனித வாழ்க்கை எவ்வாறு அமைந்திட வேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறதோ அதற்கான முழுமை யான வழி காட்டுதல்களை முன்வைக்கின்றது.

---

9) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறுன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 313.

10) மேலது, ப. 315.

ஏகத்துவக் கொள்கையின் அடையாளச் சின்னங்களை முழுமை யான வடிவத்துடனும் மிகத் தெளிவாகவும் மிக நுட்பமாகவும் இவ்வத்தியாயம் புலப்படுத்துகிறது. மேலும், இது இஸ்லாத்தின் அமைப்பு நிர்ணயச் சட்டம் (Constitution) முழுவதையும் சில சின்னஞ்சிறிய வார்த்தைகளில் சமர்ப்பித்துவிடுகிறது. உண்மையான இஸ்லாமியச் சமூகம் எப்படி அமைய வேண்டும்? அதன் கடமை கள் யாவை? என்பவற்றையும் தெளிவுபடுத்துகிறது. அவையனைத் துமே அத்தியாயத்தின் மூன்றா வது வசனத்திலேயே அடங்கி விடுகின்றன. இது இறைவனைத் தவிர வேறு யாராலும் சாத்தியப் படாத அற்புதமாகும்[11] என சமூகத்திற்குள் வாழும் நூலாக அல்குர் ஆனின் கருத்துக்களை விளக்குகின்றார்.

### இ. அறிவியல் கருத்துக்களும் அல்-மனாரும்

அறபு, பிரஞ்சு, ஆங்கில மொழிகளில் அவருக்கிருந்த புலமை யானது அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பற்றி வாசிப்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருந்தது. அதனூடாக தான் பெற்றுக் கொண்ட அறிவியல் கருத்துக்களை அல்மனாருக்குள் கொண்டு வருவதில் பின்னிற்கவில்லை. இத்தப்ஸீரில் அல்குர்ஆன் வசனங் களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை விஞ்ஞான கருத்துக் களின் அடிப்படையில் விளக்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அத்தியாயம் ''அல்பீல்'' உலக வரலாற்றின் மிக முக்கியமான செய்தியான அப்ரஹாவின் கஃபா நோக்கிய படையெடுப்பு பற்றி குறிப்பிடுகிறது. அதில் அப்படை அழிக்கப்பட்ட விதம் பற்றி பிரஸ்தாபிக்கின்ற போது அல்லாஹ் அவர்கள் மீது களிமண்ணால் சுடப்பட்டு உருவாக்கப்பட்ட சரளைக் கற்களை எறியும் பறவை களைக் கூட்டங்களாக அனுப்பினான். அவை அவர்களை உலர்ந்து பொடி பொடியாயாய் நொறுங்கிப்போன இலை தழைகளைப் போலாக்கிவிட்டன என குறிப்பிடுகின்றது.

---

11) முஹம்மத் அப்துஹு, தப்ஸீருல் மனார், பா. 4, ப. 147.

*அப்பறவைகளை குறிப்பதற்கு ''தைர்'' எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பறவைக் கூட்டத்தின் வடிவம், பருமன், அவை கொண்டு வந்து எறிந்த கற்களின் வடிவம், பருமன், இனம், அவை செயல்பட்ட விதம் அகியவற்றை வரையறுத்துச் சொல்வதில் பல்வேறு மாறுபட்ட அறிவிப்புகள் காணப்படுகின்றன. அப்போது மக்காவில் எழும்புறுக்கி நோயும் அம்மையும் பரவியிருந்தன என்றும் சில அறிவிப்புக்களில் காணப்படுகின்றன.*[12]

*மறைபொருளான விடயங்களை மறுப்போர் உலகில் நடைமுறையிலிருந்து வரும் மரபுகளுக்கேற்ப, காரண காரியங்களுக்கு உட்பட்டுத்தான் அங்கே ஏதோ ஒன்று நடந்திருக்க வேண்டும் என்று கூறி இந்த வரலாற்றுச் செய்திகளுக்கும் திருமறை வசனங்களுக்கும் பொருள்கூற முயல்கின்றனர். அந்தச் சமயத்தில் எழும்புறுக்கி நோயும் அம்மையும் கொள்ளை நோயாகப் பரவியிருந்ததாகக் கூறும் அறிவிப் புக்களைப் பிடித்தக்கொண்டு, ஆப்ரஹாவுக்கும் அவனது படைக்கும் எழும்புறுக்கி நோயும், தைர் எனும் சொல் பறக்கின்ற ஒவ்வொன்றுக்கும் சொல்லலாம் என்றும் நுண்ணுயிர்க் கிருமி* (Microbe) *களைச் சுமந்து கொண்டு பறந்து போய் நோய்களைப் பரப்பும் ஈக்களையும் கொசுக்களையுமே இங்கே குறிக்கின்றது என்கின்றனர். ஆனால் முஹம்மது அப்துஹு அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

*''இரண்டாம் நாள் இராணுவத்திலிருந்த படைவீரர்களுக்கு எழும்புறுக்கி நோயும் அம்மையும் ஏற்பட்டது. அதுபற்றி இக்ரிமா (றழி) அவர்கள் குறிப்பிடும் போது அறபு நாடுகளில் முதன் முதலில் தோன்றிய அம்மை நோய் அதுதான் என்றார். யாக்கூப் பின் உத்பா என்பவர் அப்போது நிகழ்ந்த அந்தக் கொள்ளை நோயைப் பற்றி குறிப்பிடும்போது, ''அந்த ஆண்டில்தான் அறபு நாடுகளில் எலும்புறுக்கி நோயும் அம்மையும் முதன் முதலில் காணப்பட்டன.*

---

12) முஹம்மத் அப்துஹூ, தப்ஸீருல் மனார், பா. 4, ப. 179-180.

அதுபோன்ற நோய் ஏற்படுவது மிகமிக அரிது என்றும் சொல்லப் படும் அளவுக்குக் கொடிய கொள்ளை நோய் அவர்களின் உடல் களை பாதித்தது. அந்த நோயினால் அவர்களில் உடலிலிருந்து சதைகள் துண்டு துண்டாக உதிர்ந்து விழுந்தன. இதைக் கண்டு நடுக்கத்திற்கு ஆளான அந்த இராணுவமும் அதன் தளபதியும் பயந்து ஓடிவிட்டார்கள். ஆப்ரஹாவை தூக்கிக் கொண்டு தமது நாட்டிற்கு செல்லும் வழியில் உடலிலிருந்து சதைகளும் விரல்களும் கழன்று கீழே உதிர்ந்து விழுந்து கொண்டே இருந்தன என்றும் ஸன்ஆ பிரதேசத்தைப் போய்ச் சேர்ந்ததும் அவன் நெஞ்சு வெடித்துச் செத்துவிட்டான்''[13] என்று கூறுகின்றார்.

இவையாவும் கருத்து வேறுபாடுகளுக்குள்ளாகாத அறிவிப்புக்க ளின் தொகுப்பாகும். இவ்வத்தியாயம் எலும்புறுக்கி நோயோ, அம்மையோ எதுவாயினும் காற்றுடன் சேர்த்து இறைவன் அனுப் பிய பறவைகளின் பெரும் கூட்டம் மூலம் அந்தப் படைவீரர்களின் மீது வீசப்பட்ட கற்களால் அது உருவானது என்பதைத் தெளிவு படுத்திக் காட்டுகிறது. எனவே பறவைகள் என்பது சில நோய்க் கிருமிகளைச் சுமந்து வந்த கொசுக்கள் என்றும் அவை சுமந்து வந்த கற்கள் களிமண்ணால் செய்யப்பட்டது என்றும் அவற்றை காற்று அள்ளிக்கொண்டு வரும்போது அவை உயிரினங்களின் கால்களில் பட்டு அவை கீழே விழும்போது வியர்வை சுரப்பிகள் வழியாக அவற்றின் மீது ஒட்டிக்கொண்டிருந்த கிருமிகள் உடலுக்குள் ஊடுருவிச்சென்று அதைக் கெடுத்து சதைகள் பிய்ந்து கீழே விழும் அளவிற்கு கொப்புளங்களை ஏற்படுத்தின என்றும் நம்பலாம்.

இந்த அற்பமான கொசுப்படை மனித இனத்தில் யாரை அழித்துவிட இறைவன் விரும்புகின்றானோ அவர்களை அழிப்பதற்கு அவனால் அனுப்பப்படும் படைகளிலெல்லாம் மிகப் பெரியவையாகக் கருதப்படுகின்றன.

---

13) முஹம்மத் அப்துஹூ, தப்ஸீருல் மனார், பா. 4, ப. 179-180.


எனவே, இன்று எவற்றை நுண்ணுயிர்கள் (Microbe) என்றும் (Bacteria) என்றும் கருதப்படுகின்றனவோ அவற்றையும் அந்த இறைவனின் படைகளைச் சேர்ந்ததாகக் கருதலாம். அந்த நுண் ணுயிர்களிலும் கிருமிகளிலும் அவற்றைப் படைத்தவனுக்கே தவிர அவற்றின் எண்ணிக்கையை வேறு எவராலும் அறிந்து கொள்ள முடியாது என்று எண்ணும் அளவுக்கு எத்தனையோ வகைகளும் கூட்டங்களும் இருக்கின்றன.

இதுதான் இவ்வத்தியாயத்தின் விரிவுரையைப் பொறுத்தவரை நம்புவதற்கு ஏற்புடைய விளக்கமாகத் தெரிகிறது. நாற்கால் பிராணி களாலேயே உடலால் மிகப் பருத்த பெரிய பிராணியான யானை களுடனும் தனது ஆள், அம்பு படைப்பட்டாளங்களுடனும் ஒருவன் இறைவனுக்கெதிராக புறப்பட்டுவிட்டபோது, கேவலம் கண்பார்வையால் பார்க்க கூட இயலாத மிக நுண்ணிய கிருமிகளால் அவர்களை அழித்து ஒழித்திருப்பது என்பது இறைவனின் பேராற்றலுக்கு மிகப் பெரும் சான்றில்லையா? ஒருவன் புத்திசாலி யாக இருந்தால் அவனுக்கு இது மிகுந்த ஆச்சரியத்தையும் திகைப்பையும் ஏற்படுத்தும் மிகப்பெரும் சம்பவம்தான்![14] என யதார்த்தமிக்க விளக்கங்களை முன்வைக்கின்றார்.

இவ்விளக்கம் சமகால உலக விவகாரங்களை இயற்கை அம்சங் களுடன் தொடர்புபடுத்தி நோக்க வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதுபோலவே இறைநம்பிக்கைக் கொண்ட ஒருவர் பிரபஞ்சுத்தின் செயற்பாடுகளின் பின்னணியில் விஞ் ஞானக் கருத்துக்களை உள்வாங்க வேண்டிய முறைகளை அழகாகத் தொட்டுச் செல்கிறது. இத்தகு விளக்கங்களை முன்வைப்பதில் அல்மனார் பாரியளவிலான பங்களிப்பினைச் செய்துள்ளது. அந்த வகையில் அல்மனார் அல்குர்ஆனை விளங்குவதற்கான புதியதொரு போக்கினை நோக்கி வழிகாட்டுகிறது.

---

14) முஹம்மத் அப்துஹு, தப்ஸீருல் மனார், பா. 4, ப. 180.



# பீ ழிலாலில் குர்ஆன்

## ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்)

## (கி.பி. 29.08.1966– 09.10.1906)

*ஷஹீத் ஸய்யித் குதுப் அவர்கள் அஸ்யுத் மாகாணத்தின் மோஷா எனும் கிராமத்தில் மார்க்கப் பற்றுள்ள விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இஸ்லாத்தை வாழ வைப்பதை இலட்சியமாகக் கொண்ட தனால் குதுப் குடும்பம் முஹம்மது (ஸல்) அவர்களது ஆரபம்ப காலத் துயரங்களை ஒத்தவற்றை சந்தித்தது. இவர் சிறுவயதில் அல்குர்ஆனை மனனமிட்டுக் கொண்டவர். இருபத்து மூன்று வயதில் கெய்ரோ பல்கலைக்கழகத்தில் இளமாணிப்பட்டத்தை பெற்றுக்கொண்டார். எகிப்து அரசின் புலமைப்பரிசில் மூலம் அமெரிக்காவின் ''விண்சன் டீச்சஸ் கொலேஜ்'' இல் உயர் கல்வியைத் தொடர்ந்தார்.*

*அவ்வேளையில், கலிபோனியா, ஸ்டான் போல் ஆகிய பல்கலைக் கழகங்களில்' தங்கி ஆய்வுகளை மேற்கொண்டார். நியூயோர்க்,*

*சிகாகோ, லொஸ் ஏஞ்சல் போன்ற நகரங்களுக்கும், இங்கிலாந்து, இத்தாலி, சுவிட்ஸ்லாந்து போன்ற நாடுகளுக்கும் இதனிடையே அவர் சென்று வந்தார்.*[1]

*ஸய்யித் குதுப் நாடு திரும்பியதும் தான் கற்றவற்றையும் கண்டவற்றையும் கொண்டு ''நான் கண்ட அமெரிக்கா''*[2] *என்ற தலைப்பில் புத்தகமொன்றை எழுதினார். முஸ்லிம் நாடுகள் மேற்கத்திய கலாசாரத்தை கண்மூடித்தனமாக பின்பற்றி வருவதால் விளையப் போகும் விபரீதத்தைப் பற்றியும், முஸ்லிம் நாடுகளின் முன்னேற்றத்திற்கு எதிராகவும் இஸ்லாமிய சமூகத்தின் தனித்துவங் களை அழித்தொழிப்பதற்காகவும் மேற்கத்தியக் சக்திகள் எவ்வாறு திட்டமிட்டு செயற்படுகின்றன என்பது பற்றியும், இஸ்லாமிய கலாசாரம் மற்றும் ஒழுக்கப் பண்பாடுகளை பேணிக் காத்திட வேண்டியதன் அவசியம் பற்றியும் இதில் விளக்கியிருந்தார். எகிப்து கல்வி முறையை இஸ்லாமிய மயமாக்குவதற்கு ஆக்கபூர்வ ஆலோசனைகளும் அதில் இடம்பெற்றிருந்தன.*

*இவரது அமெரிக்காப் பயணம் முற்றிலும் மேற்கத்திய சிந்தனை யாளராக மாற்றிவிடும் என்று எதிர்பார்த்தவர்கள் பெரும் ஏமாற்றத் திற்கு உள்ளாயினர். கல்விச் சீர்திருத்தம் பற்றி கருத்துக்கூறுவதற்கும் அரசு அவருக்கு தடைவிதித்தது. தான் வகுத்திடும் செயற்திட்டத்தை தனியாக தொடங்குவதை விட தமக்கு முன்னரே இத்தகைய இலட்சியப் பணிகளை துவங்கி நடத்திக்கொண்டிருப்பவர்ளுடன் இணைந்து செயற்பட்டால் பயன் அதிகமாகும் என்று எண்ணி கி.பி. 1952 ஆம் ஆண்டில் அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தில் இணைந்தார்.*[3]

---

1) அஸ்ஸர்கலி, அல் அஃலாம், பா. 3, ப. 147-148.

2) ஸய்யித் குதுப், மஆலிம் பித்தரீக், ப. 2.

3) மேலது, ப. 3-4.

இஸ்லாமிய எழுச்சியின் மூலம் எகிப்தில் ஏற்படப்போகும் ஆரோக்கியமான நிலையை மேற்கு நாடுகள் விரும்பாமையினால் பல தடவைகள் சிறைக்குச்சென்று துன்புறுத்தப்பட்டார். இறுதியாக கி.பி. 1966.08.28 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டு ஷஹீதானார்.[4]

### அ. தப்ஸீரின் தனித்துவம்

ஸைய்யித் குதுப் அவர்களின் தப்ஸீர் போக்குகளில் பின்வரும் மூன்று அம்சங்களைக் காணமுடிகிறது.

1. அத்தஜ்மீல் - (ஒரு அத்தியாயத்தின் குறிப்பிட்ட வசனங்களை ஒன்று சேர்த்து கருத்து முன்வைத்தல்).
2. அத்தப்ஸீல்- அவ்வசனங்களின் யதார்த்த பூர்வமான கருத்துக் களை முன்வைத்தல்.
3. இஆததுத் தஜ்மீஃ முன்னர் ஒன்று சேர்த்து விளங்கிய வசனங் களை மீளவும் கொண்டு வருதல்.[5]

முதலாம் பதிப்புத் தப்ஸீரின் முழு வடிவத்தைக் கொண்டிருக்க வில்லை. சிறையில் பட்ட துன்பங்களுடன் நேரம் கிடைத்த போதெல்லாம் எழுதி வைக்கப்பட்டவைகளின் தொகுப்பாகவே காணப்பட்டது. அதனால் பல கருத்துக்கள் முரண்பாடுடையதாகவும் காணப்பட்டன. இரண்டாம் பதிப்பின் போது முழுமையான தப்ஸீர் வடிவில் சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்ததும் வெளியிடப் பட்டது. குறிப்பாக சில நபித்தோழர்கள் தொடர்பாக இவருக்கிருந்த எதிர்மறையான கருத்துக்கள் இதன் போது திருத்தப்பட்டிருந்தது. உத்தியோக பூர்வமாக தாருஷ் ஷர்க் பதிப்பகம் மூலம் 1978ம் ஆண்டு ஆறு பாகங்களகளாக பதிப்பிக்கபட்டது.

இப்பதிப்புக்கு அவரது சகோதரர் முஹம்மது குதுப் அறிமுகம் வழங்கும் போது அல்குர்ஆனின் நிழலில் என்று பெயர் கொண்டு

---

4) ஸலாஹ் அப்தில் பத்தாஹ், அல் மத்ஹல் இலழ் ழலால், ப. 48.

5) முஹம்மது இப்ராஹீம் ஷரீப், இத்தஜாஹாதுத் தஜ்தீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் ப.405.

அழைக்கப்படும் இத்தப்ஸீரின் ஆசிரியர் அதன் நிழலில் வாழ்ந்து அதனைச் சுவாசித்து மூச்சுத் துறந்தவர். அவர் மரணித்தாலும் அவர் வாழ்ந்த நிழல் இன்றும் வாழ்கிறது(6) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தப்ஸீரைப் பொறுத்தவரை ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன், உர்து, துருக்கி, பாரசீகம், பங்காலி, இந்தோனேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் அதன் ஆறாவது பாகத்தின் ஒரு பகுதி (ஜுஸ்உ அம்ம) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இத்தப்ஸீர் சமகால அரசியல், சமூகவியல், பொருளியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை தேடவேண்டியது அல்குர்ஆனிலிருந்தே தேடவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டியாகவும் யாப்பாகவும் அல்குர்ஆன் ஏற்றுக் கொள்ளப்படும்போது மட்டுமே மனிதக் கோட்பாடுகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியும் என்பதை வலியுறுத்துகிறது. மேலும், பல சந்தர்ப்பங்களில் அறிவியல் விடயங்களை விஞ்ஞான பூர்வமாகவும் தர்க்கவியல் ரீதியாகவும் முன்வைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஸைய்யித் குதுப் அவர்கள் தமது தப்ஸீரின் முன்னுரையில் நான் அல்குர்ஆனின் நிழலிலே வாழ்ந்தேன். அல்லாஹ்வின் விருப்பப்படி மனிதன் இயங்குவதற்கும் அல்லாஹ்வின் அற்புதப்படைப்பான பிரபஞ்சத்துக்கும் அழகிய ஒழுங்கமைப்பு இருப்பதை உணர்கிறேன். ஆனால், மனிதன் அதன் ஒழுங்கு முறையை சீர்கெடுப்பதை உன்னிப்பாக கவனிக்க முடிகின்றது. ஆனால், இவைகளிலிருந்து மனிதரால் மீட்சிபெற வேண்டுமாயின் அல்லாஹ்வின் வார்த்தைகளின் பால் அவன் மீள வேண்டும் அதனை அவன் உணர்வுபூர்வமாக விளங்கவேண்டும் அதனை அவன் விரும்பிப் படிக்க வேண்டும். வாழ்வின் அனைத்துச் செயற்பாடுகளிலும் அவ்வசனங்களை மீட்டி மீட்டிப் பார்க்க வேண்டும் அவ்வாறே நான் அல்குர்ஆனைப் பார்க்கின்றேன்(7) என்றார்.

---

6) ஸய்யித் குதுப், பீ ழிலாலில் குர்ஆன், முன்னுரை, ப. 3-4.

7) ஸய்யித் குதுப், பீ ழிலாலில் குர்ஆன், பா. 1, ப. 6.

இத்தப்ஸீர நூலின் கருத்துக்களை அவதானிக்கின்ற போது இரண்டு வகையான கருத்துக்களைப் பெறமுடிகின்றது.

1. ஒவ்வொரு அத்தியாயமும் ஆரம்பிப்பதற்கு முன் அவ்வத்தி யாயத்திற்கான முன்னுரையை குறிப்பிட்டுள்ளார். அதில் அவ்வத்தி யாயத்தின் பிரதான இலக்கு, துணை இலக்குகள் அவை ஒவ் வொன்றுக்குமிடையிலான தொடர்பு ஆகியவற்றை விளக்கி யுள்ளார். மேலும், அல்குர்ஆனின் வசன ஒழுங்கு இலக்கிய நயம், வசனங்களுக்கும் அத்தியாயங்களுக்குமிடையிலான மறைமுகமான தொடர்பு ஆகியவற்றையும் விளக்கியுள்ளார்.

இத்தகைய முறையினை மரபு ரீதியான தப்ஸீர்களில் காணக் கிடைப்பதில்லை. இவரைப் பின் தொடர்ந்த, இலக்கிய நயத்துடன் அல்குர்ஆனைப் பார்க்கின்ற தப்ஸீர் ஆசிரியர்கள் அதனைக் கடைப்பிடிக்கின்றனர். குறிப்பாக கலாநிதி அமீன் அல் குவைலி இத்தகைய போக்கு அவசியம்[8] என்பதை வலியுறுத்துகின்றார்.


அல்குர்ஆனின் நிழலில் வாழ விரும்பும் ஒவ்வொருவரும், அல்குர்ஆனின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் தனித்துவமான கருத்துக்கள் இருப்பதை உணர்வார். அதற்கு உயிரோட்டம் இருப் பதையும் விளங்கி தன் உள்ளத்தோடு உறவாட விடுவார். உயிரின்றி உடல் வாழாதது போல் அல்குர்ஆனின் உயிரோட்டமின்றி, சுவாச மின்றி ஒரு முஸ்லிம் வாழமுடியாது என்பதையும் சொற் சுருக்கமாக முன்வைத்திருக்கின்றார்.

2. ஒவ்வொரு அத்தியாயத்தையும் பல உப பிரிவுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றும் முன்வைக்கும் சிந்தனைகளை அறிமுகப் பகுதியில் விளக்கியவற்றுடன் முரண்படாத வகையிலும் கூறியது கூறலின்றியும் ஒவ்வொரு வசனத்தையும் கவர்ச்சிகரமான மொழிநடையில் ஆழமாக மனதைத் தொடும் வகையில் விளக்கியுள்ளார்.

---

8) முஹம்மது இப்ராஹீம் ஷரீப், இத்தஜாஹாதுத் தஜ்தீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் ப.405.

இத்தப்ஸீரைப் பொறுத்தவரை அறபு இலக்கியத்திற்குப் பெரும் பங்காற்றியுள்ளது. இந்நூலில் இலக்கன விதிகள் தொடர்பான கருத்தாடல் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. அகீதா முரண் பாடான கருத்துக்கள் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு, ஷரீஆச் சட்டம் தொடர்பான பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அது தொடர்பாக சில அடிப்படை விடயங்களையே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். சமூக புனர்நிர்மாண கருத்தியல் வாதங்களுக்கே கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.



# தப்ஹீமுல் குர்ஆன்

## ஸய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

(25.09.1903–22.09.1979)

*ஸய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் மார்க்கப் பின்னணி கொண்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். இயற்கை யிலேயே அறிவாற்றல் மிக்கவர். தனது பதினேழாவது வயதில் பத்திரிகைத் தொழிலை தொடங்கியது முதல் சுயமாக இஸ்லாத்தை கற்க ஆரம்பித்தார். சிறிது காலத்தின் பின்னர் உலகம் வியக்கும் வகையில் இஸ்லாமிய உம்மத்தின் விடிவுக்கான சிந்தனை ரீதியிலான போராளியாக மாறினார்.*

*இஸ்லாமிய சமூக மாற்றச் சிந்தனையை அல்குர்ஆனின் அடிப் படையில் முன்வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். ''அல்குர்ஆனைத் தவிர வேறொரு நூல் என் வாழ்வில் எனக்குப் பயனளிக்கும் என்று நான் கருதவில்லை. அதுவே என் வாழ்வின் போக்கை மாற்றியது. மிருகமாயிருந்த என்னை மனிதனாக*

மாற்றியது. இருளிலிருந்த என்னை அது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. என் கையில் இக்குர்ஆன் ஓர் உன்னத ஒளி விளக்கானது. அதன் ஒளியில் நான் எதைப் பார்த்தாலும் அதன் யதார்த்தத்தை ஒளிவு மறைவின்றி அது எனக்குக் காட்டித் தருகின்றது. அதனை நான் பிரதான திறவுகோளாக கருதுகிறேன். ஆம் அது மனித வாழ்வின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை நொடிப்பொழுதிற்குள் திறந்து காட்டிவிடுகின்றது'' என்ற வாசகம் அவருக்கும் அல்குர்ஆனுக்கும் இடையிலான உறவை தெளிவு படுத்துகிறது.[1]

கி.பி.1942ஆம் ஆண்டு தப்ஹீமுல் குர்ஆனை எழுத ஆரம்பித்த மௌலானா, அதனைப் பூரணமாக எழுதி முடிக்க முப்பது வருட காலங்கள் தேவைப்பட்டன. ஆறு பாகங்களைக் கொண்ட முழுக் குர்ஆனுக்குமான இத் தப்ஸீரை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் எழுதிமுடித்தார். இஸ்லாமிய இயக்கத்தைக் கட்டியெழுப்பும் தேவையும் புதிய தேசமான பாகிஸ்தானை இஸ்லாமிய மயப் படுத்தும் போராட்டத்தை முன்னெடுப்பதும் இவரது பொறுப்பு வாய்ந்த சுமையாகக் கருதினார். மௌலானா தான் எத்தகைய சூழலில் தப்ஹீமை எழுதி முடித்தார் என்பது குறித்து பின்வருமாறு விளக்குகின்றார்.

''என் வாழ்வின் மிகவும் கஷ்டமான காலப்பகுதியில் இத்தப்ஸீர் எழுதும் பணியை நான் தொடர்ந்தேன். இப்பணியைப் பூரணப் படுத்த முடியாமல் போய்விடுமோ என நான் அஞ்சினேன். கி.பி.1942ம் ஆண்டு ஆரம்பித்த இப்பணியின் முதற்கட்டத்தை கி.பி.1947ம் ஆண்டில் நான் பூர்த்தி செய்தேன். ஸூரதுல் பாதிஹா முதல் ஸூரா யூஸுப் வரையான விளக்கத்தை இக்காலப் பகுதியில் எழுதி முடித்தேன்.[2]

1) முஹம்மது இப்ராஹீம் ஷரீப், இத்தஜாஹாதுத் தஜ்தீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் ப. 405.

2) 1972ஆம் ஆண்டு தப்ஹீமுல் குர்ஆன் வெளியிடப்பட்டபோது 'அசான்' சஞ்சிகைக்கு மௌலானா வழங்கிய நேர்காணல் (1972.06.15)

கி.பி.1947 ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தான் உருவாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட இந்து - முஸ்லிம் மற்றும் சீக்கியர்களுக்கிடையிலான கலவரத்தில் கிழக்குப் பஞ்சாபிலிருந்து இடம்பெயர்ந்து நானும் தோழர்களும் பாகிஸ்தான் பகுதிக்குச் சென்றபோது என்னிடமிருந்த நூற்களில் எதையும் என்னால் சுமந்து செல்ல முடியவில்லை. மேலும் புதிய சூழலில் எழுதும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. காரணம் புதிய தேசமான பாகிஸ்தானை ஓர் இஸ்லாமியப் பூமியாக உருவாக்க வேண்டும் என்பதை நான் உரத்துச் சொல்லி உணர்த்த வேண்டியிருந்தது.

கி.பி.1948 இல் ஆட்சியாளர்கள் என்னை சிறையிலடைத்தனர். என் எழுத்துப் பணி சிறையில் தொடர்வதையும் தடுத்தனர். எனவே, கி.பி.1950 ஆம் ஆண்டு வரை என்னால் எதையும் எழுத முடிய வில்லை. சிறையிலிருந்து விடுதலையடைந்து வந்த நான் கி.பி.1950ம் ஆண்டு முதல் கி.பி.1953ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அத்தியாயம் ''அர்ரஃத்'' முதல் அத்தியாயம் ''அல்அன்பியா'' வரை விளக்கத்தை எழுதி முடித்தேன்.

பின்பு நான் மீண்டும் சிறைபிடிக்கப்பட்டேன். இம்முறையும் அவர்கள் புத்தகங்களை எடுத்துச் செல்வதையோ சிறையில் வைத்து எழுதுவதையோ எனக்கு அனுமதிக்கவில்லை. ஒன்றரை வருடங் களுக்குப் பின் அவர்கள் அனுமதி வழங்கியபோது அத்தியாயம் '''அல்ஹஜ்'' முதல் அத்தியாயம் ''அல்புர்கான்'' வரை விளக்கத்தை எழுதி முடித்தேன்.

சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் அத்தியாயம் ''அஸ்ஸூமர்'' வரை விளக்கங்களை எழுதினேன். பின்னர் மீண்டும் சிறைப்பிடிக் கப்பட்டேன். முன்பு போலவே இம்முறையும் அவர்கள் நான் சிறைக்குள் எழுதுவதை அனுமதிக்கவில்லை. இஸ்லாத்தை நடை முறைப்படுத்தவென உருவாக்கப்பட்ட ஒரு நாட்டில் அல்குர் ஆனுக்கு விளக்கம் எழுதுவதைத் தடுப்பதென்பது எவ்வளவு ஆச்சரியமான விடயம்! ஆனால் அவர்கள் அப்படித்தான் செய் தார்கள். இம்முறை சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் நான் ஹாமீம் ஸூராக்களுக்கான விளக்கங்களை எழுதி முடித்தேன்.

*கி.பி.1967ஆம் ஆண்டு நான் மீண்டும் சிறையிடப்பட்டேன். இம்முறை ஏலவே எழுதியவற்றை மீட்டிப் பார்த்து திருத்திக் கொண்டேன். சிறையிலிருந்து விடுதலையடைந்து வந்தவுடன் தப்ஹீமின் ஐந்தாம் பாகத்தை எழுதி முடித்தேன். பின்பு நோய் வாய்ப்பட்ட நான் அதே நிலையில் அல்லாஹ்வின் அருளினால் ஆறும் பாகத்தையும் எழுதி முடித்து இத்தப்ஸீரைப் பூர்த்தி செய்துவிட்டேன். அல்ஹம்துலில்லாஹ்.''*[(3)]

*மௌலானா அவர்களின் இத்தப்ஸீர் இந்திய உபகண்டத்தில் இஸ்லாத்தின் புத்தாக்கத்தை மனித உள்ளங்களில் துளிர்விட துணை புரிந்தது. இத்தப்ஸீர் கருத்துக்கள் இவர் வாழ்ந்த சமகால முஸ்லிம் உலகின் புத்துணர்ச்சி சாயலை விளக்கும் வகையில் காணப்பட்டது.*

4) 1972ஆம் ஆண்டு தப்ஹீமுல் குர்ஆன் வெளியிடப்பட்டபோது 'அஈன்' சஞ்சிகைக்கு மௌலானா வழங்கிய நேர்காணல் (1972.6.15)

# ஸய்யித் குதுப், மௌதூதி (ரஹ்) ஆகியோர்க்கு எதிரான விமர்சனங்கள்

*நவீன கால தப்ஸீர்களில் முதல்நிலைத் தப்ஸீராகக் கொள்ளப் படும் பீழிழாலில் குர்ஆனின் ஆசிரியரின் சில கருத்துக்களுக்கும் மௌலானா மௌதூதி அவர்களின் கருத்துக்களுக்கும் கடுமையான விமர்சனங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக சட்டம் இயற்றும் அதிகாரம் ''அல்ஹாகிமிய்யத்'' தொடர்பாக ஸய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் அடிப்படை இபாதாக்கள் தவிர்ந்த உலக நடப்புக்களிலும் அல்குர்ஆனின் சட்ட ஒழுங்கினையே கட்டாயம் பின்பற்ற வேண்டும். அதனையே தௌஹீத் உலூஹிய்யத் குறிப்பிடுகின்றது என்றார்.*

*உலூஹிய்யத் என்பது இறையியல் தன்மை கொண்ட விடய மாகும். அல்குர்ஆன் இறையியல் சட்ட அம்சங்களை உள்ளடக்கிய நூல். எனவே ''ஹாகிமிய்யத்'' நடைமுறைப் படுத்துவதுதான் முஸ்லிமின் அகீதாவாகும். அவ்வாறு நடைமுறைப்படுத்தாத போது அவர் ஜாஹிலிய்யத் பண்பினைக் கொண்டவராக கருதப்பட*

வேண்டும் என்ற இறுக்கமான கொள்கையை தனது ''மஆலிம் பித் தரீக்'' என்ற நூலில் குறிப்பிடுகின்றார். அதாவது உலக நடைமுறை யுடன் தொடர்பான விடயங்களான ''முஆமலாத்'' என்ற அம்சம் மனிதனுக்கு உரியதன்று. மனிதன் அதற்காக சட்ட ஒழுங்கை வகுக்க முடியாது. அது அவனது சுதந்திரமுமன்று. குறிப்பாக மனித சட்டங் களை முஸ்லிம் சட்டமாகக் கொள்ள முடியாது. அது தௌஹீதுக்கு எதிரானது. அவ்வாறு நடப்பவர்கள் ஜாஹிலிய்யத்தினர். மனிதன் மனிதனுக்கு தலை சாய்க்கும் நிலைக்கு ஒப்பானது என்ற தீர்ப்பை முன்வைத்துள்ளார்.(1)

இதே போக்கினை அபுல் அஃலா மௌதூதி அவர்களும் கொண்டுள்ளார். இத்தகு கருத்துக்களினூடாக ''தக்பீர்'' காபிராக்கும் சிந்தனை இருபதாம் நூற்றாண்டில் நவீன இஸ்லாமிய கருத்து பேசும் சமூகத்தில் எழலாயின. இக்காலத்தில் இவ்விரு அறிஞர்கள் வரலாற்று ரீதியிலான அனுபவங்களை முன்வைத்து முஸ்லிம் உம்மாவின் பாரதூரமான விளைவுகளை நிறுத்த முற்பட்டனர்.

எனினும், அவர்களின் இருக்கமான கருத்துக்களின் ஆபத்தை உணர்ந்து அவற்றை சுட்டிக்காட்ட உலமாக்கள் செயற்பட்டனர். அவர்களில் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் இரண்டாம் முர்ஷிதுல்ஆம் ஹஸன் ஹுழைபி (ரஹ்) அவர்கள் நாங்கள் அல்லாஹ்வின் பால் அழைக்கும் அழைப்பாளர் மட்டுமே, தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளல்ல என்ற தொனியில் ''துஆதுன் லா குழாதுன்'' என்ற நூலில் ஸய்யித் குதுப் மற்றும் அபுல் அஃலா மௌதூதி போன் றோர் மனித சட்டங்களுக்கு மனிதன் கட்டுப்படும் விடயங்களை எவ்வாறு நோக்க வேண்டும் என்பதனை விளக்கினார்.

ஷரீஆவின் பார்வையில் ஹலால், ஹராம், முபாஹ் ஆகிய முப்பெறுமானங் களுக்குள் இருந்து ஒரு முஸ்லிம் தன் வாழ்வின் இலட்சியத்தை எப்படி அமைத்துக் கொள்வது தொடர்பாக முஹம்மது (ஸல்) அவர்கள் முதல் கி.பி.19 ஆம் நூற்றாண்டு

---

1) அபுல் ஹஸன் அலி நத்வி, அத்தப்ஸீர் அஸ்ஸியாஸி லில் இஸ்லாம், ப. 48

வரையிலான இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்களை உதாரணமாகக் கொண்டு விளக்கினார். இதே பணியை இருபதாம் நூற்றாண்டில் மரணித்த இந்திய உபகண்டத்தின் மாமனிதர் அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் அத்தப்ஸீர் அஸ்ஸியாஸி லில் இஸ்லாம் பீ மிர்ஆதில் கிதாபில் உஸ்தாத் அபில் அஃலா மௌதூதி வஷ்ஷஹீத் ஸய்யித் குதுப் எனும் நூலில் அழகான மொழிநடையில் மௌலானா மௌதூதி ஷஹீத் ஸய்யித் குதுப் ஆகியோரின் எழுத்தாக்கங்களில் அல்குர்ஆனைப் புரிந்துகொள்வது தொடர்பாக வும் தஃவாவின் வளர்ச்சிப் போக்கில் பன்மைத்துவம் மிக்க மனிதர் களில் எழுச்சிக் கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

இமாம் நத்வி அவர்கள் ஸய்யித் குதுப் (ரஹ்) அவர்களின் ''ஹாகிமிய்யத்'' என்ற அம்சம் தௌஹீதின் இன்றியமையாத ஒன்று என்பதனால் அரசியல், பொருளாதாரம், சமூகமாற்றம் என்பவற்றில் மனித யாப்பினை ஏற்படுத்துவதோ அல்லது அதற்கு கட்டுப்படு வதோ ஒருவரை முஸ்லிமென்ற பண்பிலிருந்து தூரமாக்கும். அதனூடாக அவர் ஜாஹிலிய்ய சமூகத்தைச் சார்ந்தவர் என்று கருதுவதை கடுமையாக விமர்சிக்கின்றார்.

தாத்தாரிய, மங்கோலிய மற்றும் உஸ்மானிய ஆட்சிக் காலப் பகுதியில் இஸ்லாம் மனித உள்ளங்களில் வாழ்வதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் பல வழிமுறைகளைக் கையாண்டு இஸ்லாத்தை வாழச் செய்தனர். அவர்களது முயற்சிகளினால் இஸ்லாம் பாதுகாக்கப்பட் டது. அவர்களது முயற்சிகளுக்கு பல ஒழுங்குகள் உருவாக்கியிருந்த னர். தஸவ்வுப், தஸ்கியா, ஹரகாதுல் இஸ்லாம் என்ற வகையில் அவற்றினைப் பார்க்க முடியும். எனவே இவ்வழிமுறைகளை மக்கள் பின்தொடர்ந்தனர், கட்டுப்பட்டனர். அவ்வாறாயின் அவர் கள் இயற்றிய சட்ட ஒழுங்குகள் ''ஹாகிமிய்யத்'' என்ற ஒழுங்குக்கு முரண்பாடானதாகக் கொள்ள முடியுமா என்ற வினாவை தொடுக் கின்றார்.

குறிப்பாக ஸய்யித் குதுப் அவர்கள் உலூஹிய்யத்தை இபாதத்துக் களுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளாது முஆமலாத் விடயங்களிலும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டி

ருந்தார். இது உலகில் ஷரீஆவின் வாழ்வாதாரத்திற்கு முரணான சிந்தனை என்ற வகையில் இமாம் அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் இதனை விமர்சிக்கின்றார்.[2]

இஸ்லாமிய சீர்திருத்த முயற்சிகளுக்கு எதிராக எகிப்து அரசு நடந்துகொண்ட விதம் ஷஹீத் ஸய்யித் குதுப் அவர்களின் அல் குர்ஆனைப் புரிதலில் இத்தகு கடும் போக்கினை முன்னெடுக்க காரணமாக இருந்திருக்க முடியும். இருந்த போதிலும் அரசின் பல கெடுபிடிகளுக்கு மத்தியில் இஸ்லாமிய பிரச்சாரத்தை முன்னெடுத்த இஹ்வான்களின் இரண்டாம் முர்ஷிதுல் ஆம் ஹஸன் ஹுழைபி (ரஹ்) அவர்களின் சிந்தனைத் தெளிவு ஸய்யித் குதுபின் புரட்சி மிக்க சிந்தனைப் போக்கில் ஏன் மாற்றத்தை கொண்டுவரவில்லை என்ற வினா எழுகின்றது.

அதுபோலவே, அபுல் அஃலா மௌதூதி அவர்களின் சிந்தனை யிலும் இந்தியா மறறும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் புரட்சி கரமான மாற்றத்தை ஏற்படுத்த பல இஸ்லாமிய அறிஞர்கள் நடுநிலையாக நடந்து கொண்டபோதும் இவரது தஃவா முறையில் அவர்களது கருத்துக்கள் பாதிப்புச்செலுத்தவில்லை. மேலும், சர்வ தேச முஸ்லிம் உம்மத்தின் விடிவுக்காக பாடுபட்ட பல இஸ்லாமிய இயக்கங்கள் காணப்பட்ட போதும் அவற்றின் கருத்தக்களை ஏன் இவரால் ஏற்க முடியவில்லை என்ற வினாவும் எழுகின்றது.

---

2) அபுல் ஹஸன் அலி நத்வி, அத்தப்ஸீர் அஸ்ஸியாஸி லில் இஸ்லாம், ப. 58-64



# அல்இஃஜாசுல் பயானி லில் குர்ஆனில் கரீம்

## ஆயிஷா அப்துர்ரஹ்மான் பின்து ஷாதிஃ (ரஹ்) (கி.பி.1913–1998)

*ஆயிஷா அப்துர்ரஹ்மான் - பின்து ஷாதிஃ எகிப்தில் வளர்ந்த பெண்மணி. சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர், ஆராய்ச்சியாளர், பல்கலைக்கழக பேராசிரியையும் ஆவார். கி.பி.1913 ஆம் ஆண்டில் மதீனதுல் திம்யாத் இல் பிறந்தார். இவரது தந்தை முன்னாள் அஸ்ஹர் பட்டதாரிகளில் ஒருவராக விளங்கியமை குடும்பத்தில் அறிவியல் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. தந்தையிடம் இஸ்லாமிய பயிற்சியையும் பிக்ஹ் இலக்கியம் போன்றவற்றையும் கற்றுக் கொண்டதுடன் அவரிடமே அல்குர்ஆனையும் மனன மிட்டிருந்தார்.*[1]

---

1) ஆயிஷா அப்துர்ரஹ்மான், அல் இஃஜாசுல் பயானி லில் குர்ஆனில் கரீம், ப. 1-9.

பெண்கள் கல்வி கற்பதில் ஆர்வம் செலுத்தாது வீடுகளில் முடங்கி இருந்த காலப் பகுதியில் பெண்களுக்கு கல்வி அவசியம் என்ற சிந்தனையின் அடிப்படையில் கற்பதற்கு ஆரம்பித்தார். கி.பி.1929 ஆம் ஆண்டில் ஆசிரியராகக் கடமை புரிவதற்கான நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். கி.பி.1931ஆம் ஆண்டில் அய்னு ஷம்ஸ் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அங்கு அறபு இலக்கியத்தில் தன் ஆர்வத்தை வெளிக்காட்டினார். இங்கு இலக்கியத் துறையில் முதுமாணிப் பட்டத்தை முதலாம் நிலையில் பெற்றுக்கொண்டார்.

கி.பி.1941ம் ஆண்டில் கல்வித் துறையில் ஈடுபாடுகாட்டிக் கொண்டிருந்த போது உஸ்தாத் அமீன் குவைலியை திருமணம் செய்துகொண்டார். 3 பிள்ளைகளுக்கு சிறந்த தாயாகவும் விளங்கி னார். கி.பி.1952 ஆம் ஆண்டு அறபு இலக்கியத்துறைத் தலைவர் கலாநிதி தாஹா ஹுஸைனின் வழிகாட்டலின் கீழ் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டத்தை பூர்த்தி செய்தார்.(2)

அப்துர்ரஹ்மான் பின்த் ஷாதிஃ அவர்களினது மொழிவளம், மார்க்க விவகாரங்களில் காணப்பட்ட நிபுனத்துவத்தவம் என்பன பல்வேறு கல்விசார் பதவிகளைச் சுமப்பதற்கு வழிவகுத்தது. அந்த வகையில் கர்வீன், அய்ன் ஷம்ஸ், பைரூத், குர்தூம் ஆகிய பல்கலைக்கழகங்களில் மொழித்துறைப் பேராசிரியராக நீண்டகாலம் சேவை புரிந்துள்ளார்.(3)

அப்துர்ரஹ்மான் பின்த் ஷாதிஃ இன் தப்ஸீரானது முழுமையாக அறபு மொழியியல், இலக்கண, இலக்கிய விதிகள் பற்றியே பேசு கின்றது. இந்நூல் இரு பாகங்களில் காணப்படுகின்றன. முதலாம் பதிப்பு கி.பி.1962 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இத்தப்ஸீர் சிறிய அத்தியாயங்களுக்கான விளக்க நூலாகும். அறபு மொழியின்

---

2) அப்துல் காதிர் முஹம்மது ஸாலிஹ், அத்தப்ஸீர் வல் மபஸ்ஸிரூன் பில் அஸ்ரில் ஹதீஸ், ப. 402-412.

3) http://www.islam-online.net/iol-arabic/index.asp (03.03.2009)

பயன்பாட்டின் பழைமைத்தன்மை முதல் நவீன கால மொழி வரை யான போக்கினை அவதானிக்க முடிகிறது.

இலகுவான மொழிநடையில் தேவையான இடங்களில் போது மான அளவிலான ஹதீஸ்களின் துணையுடன் அல்குர்ஆன் வசனங் களின் மையக்கருத்தை ஆழமாக விளக்கியுள்ளார். கருத்துக்களை முன்வைக்கின்ற போது இமாம் ஸமஹ்ஷரி, முஹம்மது அப்துஹு, ஹஸன் அல்பஸரி, போன்றோரின் சிந்தனைகளை உள்வாங்கி தம் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அறபு இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய சேவைக்காக கி.பி.1976ம் ஆண்டு எகிப்தின் சமூக விஞ்ஞான கற்கை நெறி கௌரவ விருது வழங்கியது. அதே காலப்பகுதியில் மன்னர் பைசலின் இலக்கியத் துக்கான விருதையும் பெற்றுக்கொண்டார். மேலும், கி.பி.1988 ஆம் ஆண்டு மொரோக்கோ அரசும் இலக்கியப் பங்களிப்பைப் பாராட்டி கௌரவித்தது. நவீனகால தப்ஸீர் துறைப் பணிப் புரிந்தவர்களில் அல்குர்ஆனின் இலக்கிய நயத்தை அறபுலகிலும் அதற்கு வெளி யிலும் அறிமுகப்படுத்தியவர் ஆயிஷா அப்துர்ரஹ்மான் ஆவார். நோயின் நிமித்தம் கி.பி.1998 டிசம்பர் முதலாம் திகதி இறையடி சேர்ந்தார்.(4)

இவரது தப்ஸீர் சமகாலத்தின் தேவையாகக் கருதப்படுகிறது. அறபு மொழிப் பிரயோகங்களில் நவீனத்துவம் செல்வாக்கு பெற்று வருவதனால் அதன் சுய தன்மை உயிரிழந்து செல்கிறது. இதன் போது, அறபு மொழியின் தனித்துவத்தைத் தெரிந்துகொள்வதற்கு இவ்வகை தப்ஸீர்கள் துணைபுரிகின்றன. இருபதாம் நூற்றாண்டில் துறைசார் வகையில் அல்குர்ஆன் நோக்கப்பட வேண்டும் என்பதற்கு இவரது இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

---

4) மேலது,



# இஃராபுல் குர்ஆன் வபயானிஹி

**முஹீத்தீன் தர்வீஷ் [ரஹ்]**

**[கி.பி.**1908–1982]

*எகிப்தை பிறப்பிடமாகக் கொண்ட முஹீத்தீன் தரவீஷ் அவர் களின் அறபு மொழி இலக்கணத்தின் வெளியீடாக ''தப்ஸீர் இஃராபில் குர்ஆன் வபயானிஹி'' என்ற நூல் காணப்படுகிறது. இந்நூல் அல்குர்ஆனின் வசனங்களில் காணப்படும் அறபு இலக்கண வடிவங்களை கவிதைகள், பழமொழிகள், உரையாடல்கள் ஊடாக விளக்குகிறது. மொழியின் பயன்பாடு பற்றித் தெரிந்து கொள்ளும் ஒருவருக்கு தேவையான வழிகாட்டலை இது முன்வைக்கின்றது. ஒரு சொல் பல பொருள், ஒரு சொல் பல மொழிப் பிரயோகம், சொற்களின் தோற்றம், வினைச் சொற்களின் ஒழுங்கு (வஸ்ன்), இடைச் சொற்கள், பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் என பிரித்தறியும் முறை பற்றி குறிப்பிடுகின்றது.*

இத்தப்ஸீர் முழுமையாக இலக்கண விதிகளையே பேசுகிறது. சில போது வசனங்களுக்கான குறியீடுகள் தொடர்பாகக் காணப்படு கின்ற முரண்பாடுகள் பற்றியும் பேசுகின்றது. அல்குர்ஆனை விளங் குவதற்கு அதன் இலக்கணப் போக்கு பற்றிய அறிவு அவசியம். அன்றேல், அல்குர்ஆனை விளங்குவது அல்லது விளக்குவது சாத்தியமற்றது[1] என்பது அவரது வாதமாகும். ஒரு இலக்கண நூலைப் படிக்கும் போது நாம் அவதானிக்கும் அனைத்து வடிவங் களிலும் இத்தப்ஸீர் இருப்பதைக் காணலாம்.


சிலபோது அல்குர்ஆனின் சொற்களை அகீதா தொடர்பாகக் காணப்படுகின்ற சிக்கல் நிறைந்த கருத்துக்களை குறிப்பிட்டுச் செல்கின்றார். அகீதா முரண்பாட்டிற்கு பிரதான காரணம் அல்குர் ஆனின் சொற்பிரயோகங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமயே ஆகும்[2] என்றார். எனவே, அல்குர்ஆனை விளங்குவதற்கு தெளி வான அறபு இலக்கண சட்டங்கள் பற்றிய அறிவு அவசியமாகும்[3] எனக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து இத்தப்ஸீர் நூல் இலக்கணத் துக்கான தப்ஸீர் நூலாக மட்டுமே கொள்ளவேண்டியுள்ளது.

---

1) முஹீத்தீன் தர்வீஷ், இஃராபுல் குர்ஆன் வபயானிஹி, பா. 1, ப. 4.

2) முஹீத்தீன் தர்வீஷ், இஃராபுல் குர்ஆன் வபயானிஹி, பா. 1, ப. 7.

3) மேலது, பா. 1, ப. 7-10.



# தப்ஸீருத் தஹ்ரீர் வத்தன்ஸீல்

## முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷூர் (ரஹ்)
## (கி.பி.1879–1973)

*முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷூர் டியூனிசியாவின் மாலிக் மத்ஹபு பத்வா குழுவின் தலைவராகவும் ஸைதூனியா பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகவும் நீண்ட காலம் சேவையாற்றியவர். பிறப்பு, இறப்பு, கற்றல்-கற்பித்தல் அனைத்தும் ஸைதூனியாவிலே இடம்பெற்றன. அறபு மொழித் துறைப் பண்டிதர் என்பதனால் எகிப்து, டமஸ்கஸ் ஆகிய நாடுகளில் அறபு மொழிக் கழகத்தின் நீண்டகால உறுப்பினராகச் செயற்பட்டார். ஷரீஆவின் பிரதான இலக்குகள், சமூக ஒழுங்கமைப்புக்கான இஸ்லாத்தின் செயல்நெறிகள் எனப் பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.*

*தப்ஸீர்த் துறையில் அவரது ஆர்வம் ஏனைய துறைகளை விட அதிகமாகக் காணப்பட்டது. பழைய தப்ஸீர்களை நன்றாகப் புரிந்து*

வைத்திருந்தார். இஸ்லாத்தின் நவீனத்துவம் பற்றிப் பேசிய முஹம்மது அப்துஹு, ரஷீத் ரிழா ஆகியோரின் கல்விப் பின்னணியில் தன்னை வளர்த்துக் கொண்டார். அதிகமாக முஸ்தபா அல்மராகியின் தப்ஸீர் கருத்துக்களை விரும்பி வாசிப்பதுண்டு. அல்லாஹ் அல்குர்ஆனை அவனது நூலாக இறக்கியதன் நோக்கம் மனிதனின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதும், அதனூடாக தனிமனித குடும்ப சமூக ஒழுங்கமைப்பை உருவாக்குவதுமாகும். எனவே, அல்குர்ஆன் வசனங்களை முறையாக விளங்குவதும் அதனை உரியவாறு எத்தி வைப்பதும் தப்ஸீர் ஆசிரியர்களின் கடமைப் பாடாகும்[(1)] எனக் குறிப்பிடுகின்றார்.

இப்னு ஆஷூர் அவர்கள் மரபு ரீதியான தப்ஸீர்களை முழுமையாக நிராகரிக்கவில்லை. மாறாக அவற்றை முழுமையாக ஏற்கவுமில்லை என்பதை ''மனிதர்களில் சிலர் மரபு ரீதியான முபஸ்ஸிரீன்களின் வார்த்தைகளுக்கு மட்டும் செவிசாய்ப்பதில் ஒற்றைக் காலில் நிற்பதைப் போல் காண்கிறேன். இது சமகால உலகின் போக்கிற்கு உகந்ததல்ல''[(2)] என்ற வார்த்தைப் பிரயோகம் இதனைக் குறித்துக் காட்டுகின்றது. இவர் தமது தப்ஸீரின் நோக்கம் பற்றி குறிப்பிடும் போது,

1. இஸ்லாத்தின் அகீதாக் கொள்கைக்கு முரணான விடயங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை சரியாகப் புரிந்து கொள்வதற்கும் வழிகாட்டுதல்.

2. நல்ல பண்பாடுகளைக் கொண்ட மனிதர்களை உருவாக்கும் பணிக்கு ஒத்துழைத்தல்.

3. இஸ்லாமியச் சட்டவிதிகளை அமுலுக்குக் கொண்டு வருதல்.

4. முன்னைய சமூகங்களின் வரலாற்றுக் கதைகளை முன்வைத்து சமூகத்தின் புனர்நிர்மாணத்திற்குப் பங்காற்றுதல்.


---

1) முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷூர், தப்ஸீருத் தஹ்ரீர் வத்தன்ஸீல், ப. 5-6.

2) மேலது, ப. 5-6.

5. சமகால அறிவியல் கருத்துக்களை அல்குர்ஆனுடன் ஒப்பு நோக்குதல்.

இப்னு ஆஷூர் மரபு ரீதியான தப்ஸீர்களை தமது நூலுக்குத் துணையாகக் கொண்டிருந்தாலும் இஸ்ராஈலிய்யாத்தின் ஊடுருவலில் இருந்து அதனை பாதுகாத்துள்ளார். மேலும், ஹதீஸ்களை தப்ஸீர் விளக்கங்களுக்கு அரிதாகவே துணையாகக் கொண்டுள்ளார். ஏனெனில், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்குர்ஆனை முழுமையாகத் விளக்கவில்லை. தேவையான போது மாத்திரமே விளக்கமளித்துள்ளார்கள். எனவே ஹதீஸில் முழுமையாகத் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளார். இத்தப்ஸீரைப் பழமையும் புதுமையும் கலந்த முற்போக்குச் சிந்தனையுடைய தப்ஸீராகக் கருத முடியும்.



# தாஜுத் தபாஸிர் லில் கலாமில் முல்கில் கபீர்

## முஹம்மத் உஸ்மான் மீர்கனி

(கி.பி.1929–1986)

*''தாஜுத் தப்ஸீர் லில் கலாமில் முல்கில் கபீர்'' என்ற தப்ஸீர் நூல் ஆபிரிக்காவைச் சேர்ந்த இமாம் முஹம்மத் உஸ்மான் மீர்கனி அவர்கள் எழுதியதாகும். இரு பாகங்களைக் கொண்ட இத்தப்ஸீர் ஒவ்வொன்றும் 600 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. ''தப்ஸிருல் ஜலாலைன்'' ஐ போன்றதொரு நூலாகக் காணப்படுகிறது. ஆபிரிக்கா வில் இஸ்லாமிய தஃவா பிரச்சாரத்திற்கு ஈடு இணையற்ற பணி யைச் செய்துள்ளது. இமாம் அவர்கள் சூபிசச் சிந்தனைப் போக்கு டையவர் என்பதால் அத்தகு சிந்தனை இந்நூலிலும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.*

எகிப்து, எதியோப்பியா, எரிதேரியா ஆகிய நாடுகளில் இஸ்லாமியப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்ற போது களத்தில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இந்நூலின் கருத்துக்கள் காணப்படுகின்றன. ‘‘சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகமானவை. அவைகளை தீர்த்துக்கொள்வதற்கு இஸ்லாம் ஒன்றே வழியாகும். இஸ்லாம் என்பது அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆதலால், தீர்வுகள் இதிலிருந்து தான் பெற வேண்டும்’’ என இவர் சமூகப் பிரச்சினைப் பற்றிக் குறிப்பிடுவதனூடாக அல்குர்ஆன் சமூகத்துக்குள் உயிர் வாழ வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார்.

இவரது தப்ஸீரிலும் இஸ்ராஈலிய்யத், நம்பகத் தன்மையற்ற வரலாற்றுக் கதைகள், முரண்பாடான சிந்தனைப் போக்குகள் யாவும் தவிர்க்கப்பட்டுள்ளன. மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சமகாலத்தில் எளிய மொழிநடையில் அல்குர்ஆனிய வசனங்களுக்கான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள இத்தப்ஸீர் உதவுகிறது.

இது ஆபிரிக்க முஸ்லிம்களை மையப்படுத்தி அமைந்திருப்பதானது பிரதேச வாரியான அல்லது அவ்வச் சமூகச் சூழலுக்கு ஏற்ப தப்ஸீர்களின் விளக்கங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இத்தப்ஸீர் ஒரு செய்தியாக முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# முடிவுரை

நவீனகால தப்ஸீர்களின் உள்ளடக்கம், மரபு ரீதியான தப்ஸீர்களின் தனித்துவத்திலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. பெரும்பாலான நவீன கால தப்ஸீர்கள் நடைமுறை வாழ்வுடன் அல்குர்ஆனை தொடர்புபடுத்தும் பணியைச் செய்துள்ளன. இக்கால தப்ஸீர் ஆசிரியர்கள் அனுப ரீதியாகப் பெற்றுக் கொண்ட நுணுக்கங்களை சமூகத்திற்குப் பயனளிக்கும் வகையில், பழமைத் தப்ஸீர்களின் அடிச்சுவட்டை தழுவியதாக முன்வைத்துள்ளனர்.

பொதுவாக நவீனகால தப்ஸீர்கள் சமூக புனர்நிர்மாணக் கருத்துக்களையே முன்வைப்பதில் கவனம் செலுத்தின. இதனால் பழமைத் தப்ஸீர்களில் காணப்பட்ட இஸ்ராஈலிய்யத், அகீதா முரண்பாடான சிந்தனைகள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன. நவீனகால தப்ஸீர்களின் சிறப்பம்சங்களில் தாய்த் தப்ஸீர்கள் அல்லது பழமைத் தப்ஸீர்களின் பிரதான கருத்துக்களை வாழ்க்கையில் யதார்த்தமிக்கதாக அமைக்கும் பணியைச் செய்துள்ளமை முக்கிய மானதாகும். அவை தஃவா இயக்கங்கள், தஃவா வழிமுறைகள்,

*இலக்கன இலக்கியங்கள் என சகல துறைகளிலும் புத்தாக்கத்தை (தஜ்தீத்) அறிமுகப்படுத்துகின்றன.*

*இச்சிறிய அறிமுகக் குறிப்பு, நவீனகால தப்ஸீர்களின் மிகச் சிறிய அறிமுகத்தை மட்டும் தமிழ் மொழி வாசகர்களுக்கு முன்வைக் கின்றது. எதிர்காலங்களில் இத்தப்ஸீர்கள் பற்றிய விரிவான நூல்கள் தமிழ்மொழியில் வெளிக்கொணர்வதற்கான முயற்சிகள் இலங்கை வாழ் இஸ்லாமிய அறிஞர்களால் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கானசக்தியை அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்; முயற்சிப் போம்.*

## *துணை நின்றவைகள்:*


1. அப்துல் காதிர் முஹம்மதுஸாலிஹ (2003), அத்தப்ஸீர் வல் முபஸ்ஸிறூன் பில் அஸ்ரில் ஹதீஸ், தாருல் மஆரிபா, பெய்ருத்.
2. முஹம்மது அலி அஸ்ஸாபுனி (1994), ஸப்வதுத் தபாஸீர், தாருல் கலம், அல்ஹலப்.
3. முஅலி அஸ்ஸாபுனி (2001), கஷ்புல் இக்திராஆத் பீ ரிஸாலதித் தன்பீஹாத் ஹவ்ல ஸப்வதுத் தபாஸீர், தாருல் ஜீல் லின்னஷ்ர் வத்தபஃ வத்தவ்ஸீஃ.
4. முஹம்மத் மதவல்லா அஷ.ஷஃராவி (1991), அத்தப்ஸீர் அஷ்ஷஃராவி, அஹ்பாருல் யவ்ம், அல்அஸ்ஹர்.
5. அபூபக்கர் ஜாபிர் அல்ஜஸாஇரி (2002), அய்ஸருத்தபாஸிர், மக்தகதுல் உலூர்ம் வல் ஹிகம், அல்மதீனா அல் முனவ்வரா.
6. அலிதன்தாவி (1350), அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன், அல்பாப் அல்ஹல்பி, அல்காஹிரா.
7. ஹுஸைன் தஹபி (1979), அத்தப்ஸீர் வல்முபஸ்ஸிறுன், தாருல் குதுபுல் ஹதீஸ், அல்காஹிரா.
8. அமீன் அல்கூலி, அத்தப்ஸீர் மஆலிமு ஹயாதிஹி மன்ஹஜுஹுல் யெவ்ம்.
9. அஹ்மது முஸ்தபா அல்மராகி (2000), தப்ஸீருல் மராகி, தாருல் இஹ்யாஉத் துராஸில் அரபிய்யா, பெய்ரூத்.
10. அஸ்ஸர்கலி (1995), அல் அஃலாம், தாருல் இல்ம் லில்மலாஈன்.
11. இமாத் மஹ்மூத் அப்தில் கரீம் (2004), அல் இமாம் அஷ்ஷஹீத் ஹஸனுல் பன்னா வ மன்ஹஜுஹு பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், தாருத்தவ்ஸீஃ வன்னஷ்ருல் இஸ்லாமிய்யா, மிஸ்ர்.
12. மாலிக் பின் நபீ, இப்னு பாதீஷ் வஆஸாருஹு: ஜம்உன் வ திராஸதுன்,மிஸ்ர்

13. முஹ்ஸின் அப்தில் ஹமீத் (1995), அந்நூர்ஸி முதகல்லிமுல் அஸ்ரில் ஹதீஸ்,

14. பதீஉஸ்ஸமான் சைட் நூர்ஸி, பிலீவ் என்ட் வேர்சிப், துருக்கி.

15. உஸ்மான் அமீன் (1944), முஹம்மது அப்துஹு, ஈஸா அல்ஹல்பி.

16. முஹம்மத் அப்துஹ்9 (1422 ஹி) தப்ஸீருல் மனார், தாருல் மஆரிப், மிஸ்ர்.

17. ஸய்யித் குதுப் (1982), பீ ழிலாலில் குர்ஆன், தாருஷ் ஷர்க், மிஸ்ர்.

18. முஹம்மது இப்ராஹீம் ஷரீப் (2008), இத்தஜாஹாதுத் தஜ்தீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், தாருஸ்ஸலாமா லித்தபாஆ வன்னஷர்.

19. ஆயிஷா அப்துர் ரஹ்மான் (1991)அல் இஃஜாசுல் பயானி லில் குர்ஆனில் கரீம், தாருருல் மஆரிப், லெபனான்.

20. முஹீத்தீன் தர்வீஷ் (1994), இஃராபுல் குர்ஆன் வபயானிஹி, தாருல் பிக்ர், பெய்ரூத்.

21. முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷுர் (2000), தப்ஸீருத் தஹ்ரீர் வத்தன்ஸீல், தாருல் பிக்ர், பெய்ரூத்.

.